21 MAR 2000

பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 08 செவ்வாய்க்கிழமை (21 - 03 - 2000) VALAMPURI ஒலி: 93

## விலை வாசி உயர்வைக் கண்டித்து ஐக்கியதேசியக்கட்சி ஆர்ப்பாட்டப் பேரணி

## ரணில் தலைமையில் நடைபெற்றது

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை ஏற்றம் மற்றும் அரச நியமனங்கள் வழங்குவது தொடர்பாகவும் அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்தும் ஐக்கிய தேசியக்கட்சி நேற்றுக் கொழும்பில் மா பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தியது.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஐ.தே கட்சியின் முக்கிய பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

நேற்று கொழும்பு பொறளை சந்தியிலிருந்து பிற்பகல் 3 மணிக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பமாகி மருதானைச் சந்தியில் முடிவடைந்தது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா் தலைமையில் ஆரம்பமான ஊர்வலத்தில் கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரிய, கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறள, கொழும்பு மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும்மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தில் அத்தியாவசிய உணவுப்பண்டங்களின் விலையை ஏற்றாதே, அரச நியமனங்களில் பாரபட்சம் காட்டாதே போன்ற சுலோகங்களும் கோசங்களும் ஆர்ப்பாட்டக்காரர்களால் எழுப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சுரிதாரைக்களையவைத்தபொலிஸார்மீது விசாரணை நடத்த வேண்டும்!

### பெண்கள் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித்தெரு சோதனைச் சாவடியில் கடந்த பத்தொன்பதாம் திகதி இளம் பெண் ஒரு வரை அவரது சுடிதாரைக் களையவைத்த சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை நடத்த வேண்டுமென்று இலங்கைப் பெண்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு கடிதம் மூலம் ஜனாதிபதியை கோரியுள்ளது.

இக்கூட்டமைப்பு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது;

சோதனைச் சாவடிகளில் இளம் பெண்களைத் தடுத்து நிறுத்தி சோதனை நடத்துவதற்கேற்ற விதிமுறைகள் வகுக்கப்பட்டு அதன் மூலம் சோதனைச் சாவடிகளில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சுரிதார் அணிந்த இளம் பெண் டபிள்யூ. பி. சிறியலதா தாக்கப்பட்டு சுரிதார் களையப்பட்டமை தெரிந்ததே. (வ)

## குமார்கொலையில் புதிய திருப்பம் கொலையாளி எந்நேரமும் கைதாகலாம்!

(கொழும்பு)

கடந்த ஜனவரிமாதம் சுட்டுக்கொல்லப்பட்ட அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பாக புதிய பல தகவல்கள் கிடைத்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு பணிப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மர்மப் பொருள் வெடித்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பழைய தகரம் ஒன்றை இழுக்கும்போது அங்குகாணப்பட்ட மர்மப் பொருள் வெடித்து படுகாயமடைந்த ஒருவர் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய தேர்தல் நடைமுறையின் கீழ் 260 எம்.பிக்கள் தெரிவு செய்யப்படுவர்

(கொழும்பு)

பாராளுமன்றத்தேர்தல் நடைமுறையில் பல மாற்றங்களை கொண்டுவருவதற்கு அரசு உத்தேசித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தற்போது நடைமுறையில் இருக்கும் விகிதாசாரத் தேர்தல் முறைக்குப்பதிலாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பல கொலைகள்புரிந்ததாக புளொட் உறுப்பினர் மீது விசாரணை

### தொல்லை தவிர்ப்புக்குழு உத்தரவு

(கொழும்பு)

இராணுவத்துடன் இணைந்து செயற்படும் புளொட் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் மீது கொலைகள் புரிந்ததாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து அவர்மீது விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தொல்லை தவிர்ப்புக்குழு உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர் லஷ்மன் ஜெயக்கொடி தலைமையில் கூடிய தொல்லை தவிர்ப்புக் குழுவே மேற்படி உத்தரவை விடுத்துள்ளது.

இக் குழுவின் கூட்டத்தில் ஏனைய உறுப்பினர்களான அமைச்சர் பட்டிவீரக்கோன் கொழும்பு மாவட்ட எம்.பி

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சி விசாரணை மீண்டும் 31ந்திகதி நடைபெறும்

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியிலிருந்து முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாளை விலக்குவதாக அக்கட்சியின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்த அறிவிப்பிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நேற்றுக் கொழும்பு நீதிமன்றில் நடைபெற்றது.

இவ் விசாரணையின் போது வரதராஜப்பெருமாளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் சில ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்குக் கால அவகாசம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதான வீதியில் பாரிய கிளைமோர் கண்ணிவெடி ஒன்று கடந்த சனிக்கிழமை விசேட அதிரடிப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்ட கிளைமோர் கண்ணி வெடி 5 கிலோ எடை கொண்டது எனப் படையினர் தெரிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினரை இலக்கு வைத்தே இக் கண்ணிவெடி புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-60)

### 13அம்சக் கோரிக்கையை முன்வைத்து

## ஐந்து ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இணைந்து டிவகலாலாவிற்கு கடிதம்

(மட்டக்களப்பு)

ஐந்து ஆசிரியர் தொழிற் சங்கங்கள் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளன.

இவை தொடர்பான கடிதமொன்றை வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின்

[8ஆம் பக்கம் பார்க்க]

### ராஜகிரிய குண்டு வெடிப்பு சம்பவம்

## சந்தேகநபர் 4வரை கைதுசெய்ய- பொதுமக்களின் உதவி கோரப்படுகிறது

(கொழும்பு)

கொழும்பு இராஜகிரிய குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வரும் நான்கு சந்தேகநபர்களை கைது செய்வதற்கு பொதுமக்களிடம் இருந்து ஒத்துழைப்பை குற்றத்தடுப்பு பணியகம் கோரியுள்ளது.

இதேவேளை குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட 7 சந்தேக நபர்களின் சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் இது தொடர்பாக தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### அரசு ஐக்கிய தேசியக் கட்சி

## முதற்சுற்றின் இறுதிச்சந்திப்பு இன்று!

## இருதரப்பும் செய்தியாளர் மாநாடு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆளும் பொதுஜனஐக்கிய முன்னணி அரசிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் முதல்ச்சுற்று இன்றுடன் முடிவடைகின்றது.

இன்று நடைபெறும் பேச்சின்போது இறுதித்தீர்மானம் எடுக்கப்படலாம் எனவும் கடந்த சந்திப்பின் போது இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை ஆராய நியமிக்கப்பட்ட பீரிஸ், எம். எச் எம். அஸ்ரப், கே .என்.சொக்ஸி அடங்கிய குழுவின் அறிக்கையும் இன்று முன்வைக்கப்பட்டு தீர்மானமெடுக்கப்

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அராலி வடக்கு செட்டியார் மடத்தைச் சேர்ந்த நாகமணி ஜெயக்குமார் ஆகிய எனது ஆமி அடையாள அட்டையும் தேசிய அடையாள அட்டையும் 16ம் திகதியில் இருந்து காணவில்லை. உடுவிலுக்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. இதைகண்டு எடுத்தவர்கள் இணுவில் நம்பிக்கை இல்லத்தில் கொடுக்கவும்.

(247)


இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக

# ஜனாதிபதியின் முயற்சி வெற்றிபெற சகலதரப்பினரின் ஆதரவும் அவசியம்

[யாழ்ப்பாணம்]

தங்களால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் எவ்வித விக்கினமும் இன்றி நிறைவேற அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் யாழ். அரச அதிபரூடாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா விஜயகுமாரதுங்காவிற்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளது:-

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை மக்கள் யாவரும் நிரந்தர சமாதானம் நிலை பெற இல்லங்கள் தோறும் பிரார்த்திப்போமாக.

சமாதானம், சகோதரத்துவம் நிலைபெற பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் விசேட வழிபாடுகளை இல்லங்கள் தோறும் காலை, மாலை, மதிய நேரங்களில் மேற்கொள்வதுடன் கோயில்கள், விகாரைகள், வழிபாட்டுத் தலங்களில் விசேட வழிபாடுகளை பூஜை நேரங்களில் தினசரி மேற்கொள்க.

சிறப்பு நிலையில் வெள்ளிக்கிழமைகள் தோறும் சகல துறைசார் ஊழியர்களும் கலந்துகொள்ள வசதியாக வாராந்தசிறப்பு வழிபாடுகள் மக்கள் சேவை போரினால் பாதிப்புற்ற இல்லத்தவர்களுக்கு ஆன்மீக ஆறுதல் வழங்குதல், மீள் குடியேற்றம், கோயில்கள் புனரமைப்புகள். பிரயாண வசதிகள் உருவாக பொது விடுமுறையை உடன் வழங்குக.

போயா தினங்களில் பௌத்த சமயிகள் மேற்கொள்ளும் வழிபாடுகள் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறவும் கதிர்காமம் முருகன் திருவருள் இல்லங்கள்தோறும் நிலை பெற்றுச் சமாதானம் நிலைபெற தாவர உணவுத் தினமாகவும் விரதகாலமாகவும் சிறப்புற உதவுக.

கலாசார நிலையில் இந்து கலாசார திணைக்களம், அமைச்சு நிலைக்கு மாற்றப்படுவதுடன் வட-கிழக்கு மாகாணத்தில் கிராம ரீதியாக கோயில்களுக்கு புனரமைப்பு நிதிகள் வழங்கப்படுவதுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம், நல்லூர், சன்னதி முருகன் கோயில்ப் பகுதிகள் புனித நகராகவும் சமாதான வலயமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டு குறித்த பகுதியில் மது, மாமிசக் கடைகள் அமைப்பதற்கு தடை செய்யப்படல் வேண்டும்.

இப் பகுதிகளில் ஆயுதங்கள் வைத்திருப்பது விலக்கப்பட்டு சமாதானம் நிலைபெறவும்—பசுவினப் பொருளாதாரம் இலங்கை மக்கள் மத்தியில் மீள உருவாக பசு இனத்தை உணவுக்காக கொலைசெய்வதை சட்டமூலமாகத்தடை செய்வதுடன் மதுவிலக்கை நடைமுறைப்படுத்துக.

இவ்வாறு அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## (இராசி பலன்)

21.03.2000
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு பங்குனி - 8)

பிரதமை காலை 10.38 வரை, அத்தம் இரவு 6.23 வரை, சிந்தயோகம், இராகு காலம் மாலை 3.48 முதல் 5.18, சுபநேரம் காலை 11.17 முதல் 12.47 வரை.

**மேடம்:**
தொழில்பாராட்டு, இனிய உறவு, காரியசிறப்பு.

**இடபம்:**
வேதாந்தம், கடினவாக்கு, பணமுடை.

**மிதுனம்:**
குழப்பம், சுடுசொற்கள், அலைச்சல்.

**கடகம்:**
நிம்மதிப்பெருமூச்சு' விருந்துபசாரம், பயணம்.

**சிங்கம்:**
பயனற்றசெயல், பெண் பகை, மனச்சுமை.

**கன்னி:**
தியாகசிந்தை, நண்பர் கலகலப்பு, வருமானப்பெருக்கம்.

**துலாம்:**
வீண்சர்ச்சை, தொழில் வெறுப்பு, காரியதாமதம்.

**விருச்சிகம்:**
பயனுள்ளசந்திப்பு, மன நிறைவு, திருமணயோகம்.

**தனுசு:**
சுபச்செய்தி, சமரசம், குடும்பசுகம்.

**மகரம்:**
பெற்றோர் கோபம், தனிமைப்படல், வேதனை.

**கும்பம்:**
ஏமாற்றப்படல், மனச்சஞ்சலம், வழிப்பயம்.

**மீனம்:**
உயர்வானநிலை, சகோதர நன்மை, தெய்வீகப்பணி.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

# கோடாரிவெட்டி கைபாதிக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்

(மட்டக்களப்பு)

மருமகன், மாமனாரை கோடரியால் கொத்தியதால் கையொன்று கடுமையாக வெட்டப்பட்டு மட்டக்களப்பு போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் மட்டக்களப்பு மாநகரசபைப் பிரிவிலுள்ள இருதயபுரத்தில் திங்கள் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது:

தனதுமகளின் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வரும்போது, பிள்ளைதவறி விழுந்ததாலேயே தனதுகணவரை மருமகன் கோடரியால் கொத்தினார் என காயமடைந்தவரின் மனைவியான ஜமுனாசதாசிவம் (வயது 38) தெரிவித்தார்.

காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர் சண்முகம் சதாசிவம் (வயது 50) என்பவராவார். மட்டக்களப்பு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இருபிள்ளைகளின் தந்தையான காயமடைந்தவரின் கை நரம்புகள் உட்பட சிலபகுதிகள் உடைந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

(க-60)

## இன்று தேர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பாணன் குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 8ஆம் திகதி கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி இன்று செவ்வாய் தேர் உற்சவமும் நாளை புதன் தீர்த்தோற்சவமும் தொடர்ந்து பூங்காவன உற்சவமும் இடம்பெற்று 24 ஆம் திகதி வைரவர் உற்சவத்துடன் மகோற்சவம் நிறைவுறும்.

25ஆம்திகதிஅன்னதானமும் இடம்பெறும்.

(க)

கடந்த ஒன்றரை மாதகாலத்தில்

# 39 பேர் படையினரால் கைது மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதேசங்களில் கடந்த ஒன்றரைமாத காலத்தில் 39 பேர் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 15 பேர் விடுதலை செய்யப்பட்டுள் ளனரெனத் தெரியவருகிறது.

கல்முனையில் கைதுசெய்யப்பட்ட 23 பேரில் 13 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும், ஏனையோர்நாசகாரத்தடுப்பு பொலிஸ் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், ஏனையோர் கொழும்பு குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவில்மேலதிக விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பில் கைதான 16 பேரில் 2 பேர் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

ஏனையோரில் 9 பேர் மட்டக்களப்பு நாசகாரத்தடுப்பு பொலிஸாரிடமும், 3 பேர் நீர்கொழும்பிலும், அனுராதபுரம், பிபிலை ஆகிய இடங்களில் தலாஒருவருமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## கும்பாபிஷேகம்

(அரியாலை)

ஏழாலை அருள் மிகு பத்திரகாளி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை இடம் பெறவுள்ளது.

(செ)

## வருடாந்த மஹோற்சவம்

(ஊர்காவற்றுறை)

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம், இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெற்று ஏப்ரல் 3 ஆம் திகதி இரதோற்சவமும், 4 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

(செ-75)

# சுன்னாகம் மத்திய சந்தைப்பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கமுயற்சி

(இணுவில்)

சுன்னாகம் மத்திய சந்தைப் பகுதியில் பேருந்து நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான 8 லட்சம் ரூபா நிதியினை வலிகாமம் தெற்கு பிரதேச சபை ஒதுக்கியுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தத்தால் முன்னைய பேருந்து தரிப்பு நிலையம் பெரிதும் பாதிக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(க-49)



## தவக்கால சிந்தனை

### 14 ஆம் நாள்

உலகெங்கிலும்; நன்மை செய்யவோ, நீதியைத் துணிந்து கெட்டு நல் வழியில் நடக்கும் மானுடங்களை நாம் காண்பது அரிதாகவே உள்ளது. இன்று பணம், பட்டம், பதவி மோகம் பிடித்து மனித உருவில், மனிதர்களற்ற நிலையில் நடமாடும் எத்தனை உருவங்களை நாம் பார்க்கின்றோம். தம்முடைய பதவியில் தமக்கு முதல் ஆசனங்களையும், வணக்கங்களையும் எதிர்பார்ப்போர் எத்தனை பேர் உளர். இவையனைத்தும் நிரந்தரமானவை அல்ல. இவற்றை உரிமையாக்கிக் கொள்ள யாராலும் முடியாது. ஏனெனில்: "ஒருவன் உலகம் முழுதும் தனதாக்கிக் கொண்டாலும் அவன் தன் ஆன்மாவை இழந்து விடில் பயன் ஏது" எனஇறைவனே கூறியுள்ளார். இறைவனைத் தேடுகிறவர்கள் அனைத்தையும் கண்டடைவார்கள் மனமுவந்து எல்லாவற்றையும் துறந்து பிறருக்கு நன்மை செய்வோம் அதற்கு எம்மைத் தகுதியுள்ளவர்களாக்கிட மனமாற்றம் வேண்டும். பிறரன்பில் ஈடுபட எம்மை முற்றிலும் கையளிக்க வேண்டும்.

ஞா. லூசிலா

## பழமரக் கன்றுகள் விநியோகம்

(அச்சுவேலி)

பொது மக்களிடையே பழமரச் செய்கை திட்டத்தை ஊக்குவிக்கும்முகமாகபுத்தூர் கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட பயனாழிகளுக்கு புத்தூர் கமநல் சேவை நிலையமூடாக இலவசமாக பழமரக் கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

பழமரச் செய்கையில் ஈடுபடவுள்ள பயனாளிகளிடம்மிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டபின்னர் இவர்களுக்கான பழமரக் கன்றுகள் இந்த வருட இறுதியின் முற்பகுதியில் வழங்கப்படவுள்ளது

இந்தத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் நிலப்பரப்பின் வீத அடிப்படையில்தோடை, எலுமிச்சை, கொய்யா, மாதுளை போன்ற பழக்கன்றுகள் விநியோகிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் புத்தூர் கமநல சேவை நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(க-14)

## வனங்களைக் காப்போம் வாரீர்

வனங்களைக் காப்போம் வாரீர்
வளமான மரங்களிங் குண்டு
தினம் தினம் எங்களின் தேவைகளை
திருப்திப்படுத்தும் நல்மரங்களிங் குண்டு
மனதிற்கு இனிமை தரும்
மலர்கொண்ட மரங்களிங் குண்டு
சினங் கொள்ளாதிதைக் கேட்டு
வனங்களைக் காப்போம் வாரீர்

பாடித் திரியும் பல
பறவைகள் இங்கே உண்டு
ஓடித் திரியும் விலங்குகள்
ஒற்றுமையை இங்கே காண்போம்
நாடி நாங்கள் சென்றால்
நல்லன பல தருமவற்றை
வாடி வதங்க விடாது
வனங்களைக் காப்போம் வாரீர்
மாபெரும் வனங்கள் அழிந்தால்
மனிதரும் அழிந்து போவர்
நீபெறும் நிலங்களில் எல்லாம்
நித்தமுமோ மரம் நடுவாய்
மாபேரும் இங்கு கூடி
யானைகளோடு அனைத்தையும் காப்போம்
வாபெரும் திட்டம் தீட்டி
வனங்களைக் காப்போம் வாரீர்

-குப்பிளான் ஆ.மோகன்

(மார்ச்-21 உலக வன தினமாகும்)

# மக்களிடம் புரிந்துணர்வு இருந்தால் சமரச பேச்சு வெற்றிபெற முடியும்

## நோர்வே தூதுவர் சொல்கின்றார்

(கொழும்பு)

''இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றிப்பாதை நோக்கிச் செல்ல வேண்டுமானால் மக்களிடையே புரிந்துணர்வு அவசியம்''

இவ்வாறு இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் தெரிவித்துள்ளார்.

நோர்வே நாட்டுத் திரைப் படவிழா கொழும்பில் நிகழ்வதனையொட்டி நடைபெற்ற மாநாட்டில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

''1976ஆம் ஆண்டிலிருந்து நோர்வே இலங்கையில் வர்த்தகம், தொழில்நுட்பம்' முதலான துறைகளில் தொடர்பையேற்படுத்தியிருந்தது.

தற்போது நோர்வே இலங்கை தேசியத் திரைப் படக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து பல உதவிகளை வழங்கவுள்ளது.

இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையிலான இராஜதந்திர உறவு, கலாச்சார வர்த்த உறவுகள் தற்போது நெருக்கமடைந்து வருகின்றன'' என்றும் அவர் சொன்னார்,

நோர்வே திரைப்படவிழா மார்ச் 31ம் திகதி முதல் ஏப்ரல் 6ம் திகதிவரை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நிகழவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பல தரப்பட்ட ஆறு திரைப் படங்கள் அங்கு காண்பிக்கப்படவுள்ளன. (சி)

பலாலி, கோப்பாய் ஆசிரியர்கலாசாலை

# நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்கடிதங்களை பெற ஏற்பாடு

(மந்துவில்)

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளுக்கானபயிற்சி ஆசிரியர்களை: தெரிவு செய்வதற்கானநேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணம் கல்வி வலயம் 1இல் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறுகின்றது.

மேற்படி பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பித்தும் நேர்முகப்பரீட்சைக்கான அழைப்பு கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் உடனடியாக நேர்முகப்பரீட்சைக் குழுவினரை வலயம் 1 கல்விப் பணிமனையில் சந்தித்து அழைப்பாணை கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என நேர்முகப் பரீட்சைக் குழுவினர் அறிவித்துள்ளனர். (க-9)

# கல்முனை தமிழ்ப் பிரிவு மேலதிக பிரதேச செயலகத்தை தரமுயர்த்த பெருமாள் கோரிக்கை!

கல்முனை மேலதிக பிரதேச செயலகத்தை (தமிழ் பிரிவு) முழுமையான பிரதேச செயலகமாகத் தரம் உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களிடம் வடக்கு - கிழக்கு முன்னாள் முதலமைச்சரும் ஈ.பி.ஆர்.எல்.எப். ஐச்சேர்ந்தவருமான அ. வரதராஜப்பெருமாள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கல்முனையில் பெரும்பாலான பொதுமக்களாலும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களாலும் 20.03.2000 அன்று ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படும் உண்ணாவிரதத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள வரதராஜப்பெருமாள் இதில் ஜனாதிபதி அவர்கள் உடனடியாக தலையிடுவதோடு கல்முனை மேலதிக பிரதேச செயலகத்தை (தமிழ்பிரிவு) தரமுயர்த்துவதற்கானபணிப்புரைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கும்படியும் கேட்டுள்ளார்.

இந்த தரமுயர்த்தலுக்கான நடவடிக்கைகள் பூர்த்தியானதும் பிரதேச செயலகம் செயல்படுவதற்கான கட்டட வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளையும் வழங்கி உதவுமாறும் ஜனாதிபதியிடம் வரதராஜப்பெருமாள் மேலும் கோரியுள்ளார்.

# கசிப்பு விற்றவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த ஜெயராஜ் சுரேஸ்குமார் என்பவருக்கு கசிப்பு விற்றமைக்காக ரூபா 3000 அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (03)

# வட்டுக்கோட்டையில் அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள்; மக்கள் விசனம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தபாலகத்திலும், கடை ஒன்றிலும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வேளைகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

தபாலகத்தின் யன்னல் உடைக்கப்பட்டு உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த இரும்புப் பெட்டியை உடைக்க முற்பட்டனர். எனினும் அதனை திறக்க முடியாததினால் அங்கிருந்த பெறுமதிமிக்க பார்சல்களை திருடிச் சென்று விட்டார்கள்.

இதேவேளையில் வட்டுக்கோட்டையில்பலசரக்குக் கடைஒன்றும்உடைக்கப்பட்டு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

ஒரு மாத காலத்திற்கு முன்னர் அராலி மத்தி பகுதியில் இந்து மத குரு ஒருவன் வீட்டிலே நகைகள், பணம் முதலியன திருடிச்செல்லப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-24)

# சட்டவிரோத கள் விற்பனையால் இளம் சந்ததி பாழாகும் அபாயம்

(அனலைதீவு)

காரைநகர் பிரதேசத்தில் இடம்பெயர்ந்தோரின் காணிகளில் உள்ள பனைகளில் எவருடைய அனுமதியும் இன்றி கள் இறக்கப்பட்டு விற்பனை செய்யும் முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கள் களவில் ஈடுபடுவோர் பலதரப்பட்ட இடங்களில் எல்லாம் கள்ளை விற்பனை செய்வதனால் தவறணைகளுக்கு வழங்கப்படும் கள்ளின் அளவு மிகவும் குறைவடைந்திருப்பதாகவும், இளம் சந்ததியினர் கள்ளினை அருந்துவது காரைநகர் பகுதியில் தற்போது அதிகரித்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-86)

# மட்டு இசை, நடனக் கல்லூரி இணைப்புக் குறித்து ஆராய மாநாடு

(கொழும்பு)

சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியை கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பது தொடர்பாக ஆராயும் உயர் மட்ட மாநாடு ஒன்று எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை கலாசார அலுவல்கள் அமைச்சின் அமைச்சர் லஷ்மன் ஜெயக்கொடி தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி இணைப்புத் தொடர்பாக கோரப்பட்ட பூர் வாங்க அறிக்கையை கிழக்குப் பல்கலைக் கழகத்துணை வேந்தர் பேராசிரியர் ம. செ. மூக்கையா இம்மாநாட்டில் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விவகாரம் தொடர்பாக மாணவர் ஒன்றியம் போராட்டம் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி)

# பயத்துடன் தமதுபொழுதைக் கழிக்கும் நாவற்குழி மக்களின் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி, தச்சன்தோப்பு ஆகியபகுதிகளில்தற்பொழுது இயல்பு நிலை திரும்பிக் கொண்டிருக்கின்றபோதிலும் 350 குடும்பங்கள் மாத்திரமே இதுவரையில் குடியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதிகளில் 700 குடும்பங்கள்வசித்துவந் போதிலும் கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட இடம்பெயர்வை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகப்பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் ஆயிரம் மாணவர்களுடன் இயங்கி வந்த நாவற்குழி மகாவித்தியாலயத்தில் தற்போது 350 வரையான மாணவர்களே கல்விபயின்றுவருகிறார்கள்.

பதற்றநிலை இப் பகுதிகளில் தொடர்ந்தும் நிலவி வருவதால் மக்கள் பயத்துடனேயே தமது கடமைகளில் ஈடுபட்டுவருவதாகத்தெரிவிக்கப்படுகிறது. (க-3)

# இன்று பற் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச பற்பரிசோதனை மற்றும் பற்சிகிச்சை முகாம் ஒன்று வேலணைத்துறையூர் ஐயனார் வித்தியாலயத்தில் இன்று நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி வை,இராஜரட்ணம் பற்பரிசோதனைகளை மேற்கொள்வார் மேற்படி வித்தியாலய அனைத்துமாணவர்களும் பரிசோதிக்கப்படுவதுடன் அவர்களுக்கு பற்தூரிகைகளும் பற்பசைகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

யாழ். லயன்ஸ்கழகத் தலைவர் லயன் பேராசிரியர் இரா சிவச்சந்திரன் தலைமையிலான 10பேர் கொண்ட குழுவே மேற்படி பற்சிகிச்சைமுகாமை நடத்தவுள்ளது. (ச)

# கூடுதல் ஆசிரியர்களை பற்றாக்குறை நிலவும் இடங்களுக்கு அனுப்புக

## பணிப்பாளருக்கு அமைச்சு பணிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் தேவைக்கதிகமாகக் கடமையாற்றும் ஆசிரியர்களை ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யுமாறு கல்வி உயர் கல்வி அமைச்சு மாகாணக் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளது.

குறிப்பாக நகர்ப்புறப் பாடசாலைகளிலேயே மேலதிக ஆசிரியர்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை கஷ்டப் பிரதேசங்களில் பல வருடங்கள் தொடர்ந்து கடமை புரியும் ஆசிரியர்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்குமாறும் அமைச்சு பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது. (சி)

# செய்தியாளர் (நிருபர்) பதவிக்கான வெற்றிடம்

பின்வரும் இடங்களில் செய்தியாளர்களாகக் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1) மீசாலை
2) மிருசுவில்
3) மட்டுவில்
4) பளை
5) கொடிகாமம்
6) எழுதுமட்டுவாள்
7) நாவற்குழி
8) முகமாலை
9) மறவன்புலோ

★ கல்வித்தகைமைகள் குறிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை இம் மாதம் 27ந் திகதிக்கு முன்னதாக.

பிரதம ஆசிரியர்
**வலம்புரி**
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# இல்ல மெய்வன்மை போட்டி

(அச்சுவேலி)

யா / அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 1,30 மணிக்கு வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சி. தங்கவேல் தலைமையில் நடைபெறும் இப் போட்டிக்கு, யாழ். வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (செ-14)


## அன்பு வாசகர்களே!

இதோ!
உங்கள் துன்பத்தில் வலம்புரியும் இன்றே இணைந்து கொள்கிறது
உங்கள் உறவுகளின் இழப்பை வெளிப்படுத்தும்

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- வீட்டுக்கிருத்திய அழைப்புகள்
- நினைவஞ்சலிகள்

யாவற்றையும் மிகமிகக் குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வலம்புரி காத்திருக்கிறது.

மு. குறிப்பு: வலம்புரியில் மரண அறிவித்தல் பிரசுரிக்கப்படும் போது அதன் 31 ஆம் நாள் நினைவஞ்சலிக்கு விசேட சலுகை வழங்கப்படும்

# அமெ. அதிபரின் இந்திய விஜயம்

# அரசியல் நோக்கைக் கொண்டதே

### வாஷிங்டன் தகவல்

(புதுடில்லி)

அரசியல் நோக்கத்துக்காகவே அமெரிக்க அதிபர் இந்தியாசென்றுள்ளார் என்று வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன.

மாஜி அமெரிக்க அதிபர் ஜிம்மிக்காட்டர் 22 வருடங்களுக்கு முன் இந்தியாவிற்கு வந்ததன் பின் இப்பொழுது தான் ஒரு அமெரிக்க அதிபர் இந்தியா வருகின்றார் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இந்தியாவுடன் பல விடயங்களில் முறுகல் நிலைகள் இடைக்காலத்தில் இருந்திருக்கின்றன. பொருளாதாரத் தடைகள் அரசியல் உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் சீர்செய்யவே இவ்வளவு காலம் கழித்து அமெரிக்க அதிபர் இந்தியாவிற்கு வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நெருக்கமாயிருந்த பாக்கிஸ்தான் - அமெரிக்க உறவு விரிசலடைந்துள்ளதுஎன்றும்- இந்தியாவை அரசியல் அணியில் சேர்க்க பில் கிளின்டன் இந்திய வருகை முக்கியமாகப் பயன்படும் என்றும்- அரசியல் ரசிகர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

வாஷிங்டனிலிருந்து வரும் செய்தியை நிரூபிப்பதாக இது அமையும் என்று சொல்லப்படுகிறது. (து-சி)

# பயணிகள் பஸ்ஸில் குண்டுவெடிப்பு ஒருபெண் பலி! 16 பேர் காயம்

(புதுடில்லி)

ஆக்ராவில் பில்லிபுக்கூர் கிராமத்தில் சிலதினங்களின் முன்னர் போக்குவரத்து பஸ் ஒன்றில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 1 பெண்பலியானதுடன் 16 பேர் காயமடைந்துள்ளதாகவும், இவர்களில் பலரின் நிலைமோசமாக இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் பற்றிமேலும் தெரியவருவதாவது; டில்லியிலிருந்து ஆக்ரா நோக்கிச் சென்று கொண்டிருந்த இப் பஸ்வண்டியில் 40 பயணிகள் பயணம் செய்ததாகச் சொல்லப்படுகின்றது.

அதேவேளை அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் ஆக்ராவிற்குச் செல்லவிருப்பதற்கு சிலதினங்களுக்கு முன்னர் இக்குண்டுவெடிப்புச சம்பவம் நிகழ்ந்தமை குறித்து இந்திய பாதுகாப்புத்துறையினர் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர். (க-5)

# அங்கோலா கிளர்ச்சியாளர்களுக்கு பல்கேரியா ஆயுத விநியோகம்

### ஐ. நா. சபை குற்றச்சாட்டு

(லண்டன்)

அங்கோலா கிளர்ச்சிவாதிகளுக்கு ஆயுத விநியோகம் செய்ததாக ஐக்கிய நாடுகள் சபை சுமத்திய குற்றச்சாட்டினை பல்கேரியா நிராகரித்துள்ளது.

1993 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபை தடை விதித்திருக்கும் யுனிபா என்னும் கிளர்ச்சிவாத அமைப்பிற்கு பல்கேரியா ஆயுதங்களை வழங்கி வருவதாக அண்மையில்வெளியிட்டிருந்த அறிக்கையில் குற்றம் சாட்டியிருந்தது.

இதனை மறுத்துள்ள பல்கேரியா இது ஓர் ஆதாரமற்ற குற்றச்சாட்டெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேசமயம்— நியூயோர்க் ரைம்ஸ், சண்டே ரைம்ஸ் ஆகிய பத்திரிகைகள் இலங்கை, கொங்கோ, சியராலியோன் போன்ற நாடுகளின் கிளர்ச்சிவாதிகளுக்கு பல்கேரியா ஆயுதங்களை வழங்கி வருகிறது என அண்மையில் குற்றம் சாட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

### பாக் ஆட்சியாளரின்,

# புதிய நிர்வாக முறை அறிவிப்புக்கு சிந்து அரசியல் தலைவர்கள் கடும் எதிர்ப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இம்மாதம் 23ஆம் திகதி புதிய நிர்வாக முறையை அறிவிக்கப்போவதான அந்நாட்டின் சர்வாதிகார ஆட்சியாளர் பெர்வேஸ் முஷாரப்பின் அறிவிப்பானது சிந்துமாகாண அரசியல் தலைவர்களுக்குக்கடும் சினத்தை உண்டுபண்ணி இருப்பதாகத் தெரிய வருகிறது.

சிந்துமாகாண மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பாகிஸ்தான் அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும்.

சிந்துமக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி கிளர்ச்சி நடத்தப்போவதாகவும் சிந்து மாகாண தேசியத்தலைவரும் பாதுகாப்புத்தலைவருமான ராசூல் பக்ஸ்பலீஜோ தெரிவித்துள்ளார். (து-9)

# பிச்சை எடுப்பதற்கு பிள்ளைகளை அனுப்பவேண்டாம்; பிரி. அமைச்சர்

(லண்டன்)

பிரிட்டனில் அகதிகளாய் உள்ளவர்களுக்கு இருப்பிட வசதிகளும் மற்றும் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதால் பிள்ளைகளைப் பிச்சை எடுக்க அனுப்பவேண்டாம் என்று அந் நாட்டு உள்துறை அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாய் லண்டன் பொலிஸார்தகவல் தருகையில் கடந்த ஆறுமாதங்களில் சிறுவர்கள் பிச்சை எடுப்பது அதிகரித்துவருவதாகக் குறிப்பிட்டனர்.

இப்படிபிச்சை எடுக்கும் சிறுவர்களை பொலிஸார் கைது செய்கின்றனர்.

இவர்களில் ருமேனியச் சிறுவர்களே கூடுதலாகப் பிடிபடுகின்றனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை லண்டனில் ஒருலட்சம் அகதிகள் வாழ்வதாகப் பத்திரிகைக்குறிப்பொன்றில் சொல்லப்படுகிறது. (க-து)

# நேபாளத்தின் புதிய பிரதமராக கொய்ராலா தேர்ந்தெடுப்பு

(காட்மண்டு)

நேபாளநாட்டுப் புதிய பிரதமராக கிரிஜா பிரசாத் கொய்ராலா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

முன்னர் பிரதமராக இருந்த கிருஷ்ண பிரசாத் பட்டாரராய் பதவியில் இருந்து திடீர் இராஜினாமாச் செய்ததையடுத்து ஆளும்கட்சி தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற கட்சித் தலைவர் தேர்தலில் 113 பாராளுமன்ற உறுப்பினர்களில் 69 உறுப்பினர்கள் கிரிஜா பிரசாத் கொய்ராலாவுக்கு ஆதரவாக வாக்களித்தமையை அடுத்தே இவரது தெரிவு இடம்பெற்றுள்ளது. (க-9)

### உலக வலம்

# 1000 கைதிகள் தப்பியோட்டம்

# தாய்லாந்து சிறையில் சம்பவம்

(பாங்கொக்)

தாய்லாந்தில் இடம்பெற்ற இருவேறு சிறையுடைப்புச் சம்பவங்களில் 1000 குற்றவாளிகள் தப்பியோடி விட்டனர்.

இவர்களில் பலரைத்தேடிக் கண்டு பிடித்து கைது செய்திருப்பதாகவும் 200 பேர் வரையில் இன்னமும் மறைந்து வாழ்வதுடன் அவர்களைத் தேடும் பணிகளைத் தீவிரப்படுத்தி இருப்பதாகவும் பாங்கொக் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் தாய்லாந்தில் இடம்பெற்ற சிறையுடைப்பில் 600 கைதிகள் தப்பியோடியிருந்தனர்.

இச்சம்பவம் நடைபெற்ற மறுதினம் பாங்கொக் நகரிலுள்ள இளம் கைதிகள் சிறையிலிருந்து 400 ஆண் குற்றவாளிகள் தப்பி யோடியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் 11 இற்கும் 18 இற்கும் இடைப்பட்ட வயதினராவர்.

1000 குற்றவாளிகளுக்கு வீடு செல்வதற்கு 5 நாள் விடுமுறையினை சிறையதிகாரிகள் வழங்கி இருந்தனர்.

இதனையறிந்து மற்றைய சிறைகளில் இருந்த கைதிகளும் தமக்கும் விடுமுறை வழங்குமாறு கோரி வந்தனர்

அவர்களது கோரிக்கை நிறைவேற்றப்படாததாலேயே மேற்படி சிறையுடைப்புக்கள் இடம் பெற்றிருப்பதாகத்தெரிய வருகிறது. (க-9)

### 1997 ஆம் ஆண்டு

# அமெரிக்காவில் வீழ்ந்து நொருங்கிய விமானத்தில் பயணித்தோருக்கு நட்டஈடு

(சியோல்)

கடந்த 1997 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வீழ்ந்து நொருங்கிய கொரிய விமானத்தில் பயணம் செய்து உயிரிழந்த அனைவரது குடும்பங்களுக்கும் நட்ட ஈடு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

இவ்விபத்தில் உயிரிழந்த நூற்றுக்கணக்கானவர்களினதும் குடும்பங்களுக்கு 3 கோடி டொலர் நட்டஈடு வழங்க முன்வந்திருப்பதுடன்,

விபத்துக்குக் காரணம், தமது வான்போக்குவரத்துக் கட்டுப்பாடு சீராக இயங்காமையே எனவும் ஒப்புக் கொண்டுள்ளது.

## செய்திக் குவியல்

★ பால் பொருட்களை நீண்டகாலம் பாதுகாக்கக் கூடிய பக்ரீறியாக்களை உருவாக்கியுள்ளாகள். கர்ணாவிலுள்ள பால் பண்ணை ஆராய்ச்சி நிலையத்தினர் இதன்பெயர் லட்டக்கரியா என்று தெரிவிக்க படுகிறது.

★ இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் அமெரிக்க அதிகாரிகளுக்கு மிடையே பதினொருசுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றே பொருளாதாரத் தடைநீக்கப்பட்டது.

★ ஜம்முவிற்கும் சிலால் கோட்பகுதிக்குமிடையே 59 கிலோ மீற்றர்மின்சார வேலி போட இந்தியா அனுமதி வழங்கியுள்ளது.

★ புதுச்சேரி காங்கிரசில் தலைவர் நியமனவிடயத்தில் கந்தசாமி கோஷ்டிக்கும் வைத்திலிங்கம் கோஷ்டிக்கும் பலப்பரீட்சை ஏற்படவே இடையில்இருந்த சண்முகம் பதவியேற்றார்.

★ இந்தியா இலங்கையிலிருந்து ஆயுள்வேத மருந்துகளை இறக்குமதி செய்கிறது.

★ ஆசிய திரைப்பட விழாவில் ஒன்பது திரைப்படங்கள் திரையிடப்பட இருக்கின்றன. (து-சி)

# புதுவை முதல்வராக சண்முகம் தாக்குதல் முயற்சி முறியடிப்பு

(சென்னை)

புதுச்சேரி பிரதேசத்தின் முதல்வர் ஜானகிராமன்பதவி விலகியதையடுத்து பாண்டிச்சேரி காங்கிரஸ் கட்சித் தலைவர் பி. சண்முகம் (73. வயது) புதுவையின் புதிய முதல்வராகப் பொறுப் பேற்றுள்ளார்.

முன்னாள் முதல்வர் வைத்தியலிங்கம் மற்றும் ரங்கசாமி இருவரில், ஒருவரை முதல்வராக நியமிக்கலாம் என்ற வகையில் புதுவைமாநில சட்டப்பேரவையில் கருத்துக் கணிப்பு நடாத்திய போது இருவரும் சம அளவான ஆதரவைப் பெற்ற நிலையில் பி. சண்முகம் பொதுக்கருத்துமூலம் தெரிவு செய்யப்பட்டார்.

தற்போது சட்டப்பேரவை உறுப்பினரல்லாத பி. சண்முகம் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறித்து காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை

புதிய முதல்வராக ரங்கசாமிதேர்ந்தெடுக்கப்படலாம் என எதிர்பார்த்த அவரது ஆதரவாளர்கள் சண்முகம் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறித்து ஆத்திரமடைந்து அவர்காரில் செல்லும்போது மறைந்திருந்து தாக்குதல் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்ட போது அம் முயற்சிகள் இறுதியில் பலிக்கவில்லை என்ற தகவலும் வெளியாகியுள்ளது. (க-9)

# அரசின் அனுமதியுடன் விடுதலைப்புலி உறுப்பினருக்கு வேலூரில் திருமணம்

[சென்னை]

லண்டனிலிருந்து வந்த உதயகுமாரி என்ற யுவதிக்கும் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவருக்கும் வேலூர் திப்புமஹாலில் திருமணம் தமிழகஅரசின் அனுமதியுடன் சிறப்பாக நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றிய விவரம் வருமாறு:- ''வேலூர் திப்பு மஹாலில் திப்புசுல்தானில் குடும்பத் திருமணம் நடைபெற்று 195 வருடங்களாகின்றன.

இந்த மஹாலில் கடந்த புதன்கிழமை விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் என்று கூறப்படும் ராஜசூரியர் என்பவருக்கு திருமணம் நடைபெற்றது.

வேலூர் கோட்டையில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று கூறப்படுவோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ராஜசூரியரும் ஒருவர்.

இலங்கையிலிருந்த காலத்தில் இவருக்கு இவரது உறவினர் மகள் உதயகுமாரிக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அதன் பின் உதயகுமாரி லண்டன் சென்றுவிட்டார். ராஜசூரியர் தமிழகம் வந்த போது பொலிஸாரிடம் பிடிபட்டு திப்பு மஹாலில் அடைக்கப்பட்டார்.

ஏற்கனவே தங்களுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்குமாறு ராஜசூரியர் விடுத்திருந்த கோரிக்கையைத் தமிழக அரசு ஏற்று அதற்கு அனுமதி வழங்கியது.

அதற்கமைய லண்டனில் இருந்து உதயகுமாரி குடும்பத்தாருடன் வேலூர் வந்து சேர்ந்தார். பதிவாளர் அலுவலக அதிகாரி முன்னிலையில் இந்து முறைப்படி உதயகுமாரிக்கும் ராஜசூரியருக்கும் திருமணம் நடைபெற்றது.

1806 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம்திகதி இதே திப்பு மஹாலில் திப்புசுல்தானின் குடும்பத் திருமணம் நடைபெற்றது. அதன் பின் நிகழ்ந்த முதல் திருமணம் இது என்று தெரிவிக்கப்படுகிறது. (சி)

# தீர்வு கிடைக்கலாமென்ற நம்பிக்கை துளிர்க்கையில், வேண்டாத முடிவு

## ஜேர்மன் அதிபருக்கு டக்ளஸ் எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

''சகல தரப்பினருக்கும் ஏற்றதொரு முடிவைக் கண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற இவ்வேளையில் இலங்கைக்குத் தமிழர்களை திருப்பியனுப்புதல் என்ற தீர்மானம் வேண்டாத ஒன்று எனக் கருதுகிறோம்'' என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். எம். பி. யுமான திரு. டக்ளஸ் தேவானந்தா ஜேர்மனி சமஷ்டிக்குடியரசு அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதம் ஒன்றில் கூறியுள்ளார்

இக்கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது. 'தஞ்சம் கோரிய' 5500 ஈழத்தமிழர்களின் திருப்பி அனுப்பும் முடிவு என்பது தொடர்பாக இக்கடிதம் எழுதப்படுகிறது.

தமிழ்த்தினசரிகளில் மேற்குறித்த முடிவை ஜேர்மன் குடியரசு மேற்கொள்ள முனைவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஜேர்மன் குடிவரவுச் சட்ட விதிகளுக்கு அமைவில்லாத அரசியற் தஞ்ச விண்ணப்பங்கள் எனக் கொள்ளப்படுவதாக அறியப்படுகிறது. ஜேர்மன் தூதராலய அதிகாரியின் தகவல் என அறியப்படுகிறது.

அரசியல் தீர்வொன்றிற்கான பேச்சுவார்த்தை மாசி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறும் இவ்வேளையில் சகல தரப்பினருக்கும் ஏற்றதொரு முடிவைக் கண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரலாமென எதிர்பாக்கின்ற வேளையில் இத்தீர்மானம் வேண்டாததொன்று.

எங்கள் கணிப்பில் குறைந்தது மூன்று வருடங்களாவது தமிழ் சிறுபான்மையினரின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும். அன்றியும் அரசியல் தீர்வினை நடைமுறைப்படுத்தவும் அதே காலப்பகுதி தேவையாகும்.

புலம் பெயர்ந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ளோர்க்கு ஆயிரக்கணக்கில் வேலைவாய்ப்பைப்பெற்றுக் கொள்வதென்பது உடன் சாத்தியப்படாததொன்று,

திட்டமிடாத புலம் பெயர்ந் தோரின் வருகை அரசியல் தீர்வுக்கென செயற்பாட்டையே குழப்பியடிக்கக் கூடியது திரும்பி வருவோர்க்கான பாதுகாப்பு நிலைகளே பிரச்சினைகளை உருவாக்குவதாக அமையும்.

எனவே மாட்சிமை தங்கிய அரசு தலைவரை குறித்த தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறும் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திலிருத்துமாறும் வேண்டுகின்றோம். (சி)

# "வாழைப்பழமா? வேண்டாம் ஆளைவிட்டால் போதும்"

(யாழ்ப்பாணம்)

தற்போது குடாநாட்டில் மிக, மிக மலிவான பொருள்என்றால் அது வாழைப்பழம்தான் எனும் நிலையாகி விட்டது.

வாழைச்செய்கை யாளர்கள் பலர் இப்போதெல்லாம் வாழைக்குலைகளைச் சந்தைக்குக் கொண்டுசெல்வதை விடுத்து அயலவர்களுக்கு, உற்றார், உறவினர் நன்பர்களுக்கு அன்பளிப்பாக அதுவும் வலுக்கட்டாயமாகக் கொடுத்துவருவதை அவதானிக்க முடிகிறது.

அவ்வாறிருந்தும் சிலர் வாழைக்குலையா? வேண்டவே வேண்டாம். ஆளைவிட்டால் போதும். என்று இந்த அன்புத் தொல்லையிலிருந்து நழுவிக்கொண்டு விடுகிறார்கள்.

வாழைக்குலையை மிகமலிவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதால் ஆடுகளுக்கான தீவனமாகவும்அது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையால்வாழைச் செய்கையாளர்கள் மிகுந்த நட்டமுற்றுள்ளானர். (சி)

# தமிழ் வாலிபர்களுக்குத் துறைமுக வேலை வாய்ப்புகள் மிகக் குறைவு

## அநீதி என்கிறார் தேவராஜ் எம். பி

(கொழும்பு)

''பாதுகாப்பு என்ற காரணத்தை மையமாகவைத்து அதிகமான தமிழ் வாலிபர்களுக்குத்தொழில்வாய்ப்புகள் மறுக்கப்பட்டுள்ளன'' என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பி.பி. தேவராஜ் குற்றஞ் சாட்டியுள்ளார்.

''இந்நிலை நியாயமானதல்ல. அவர்களின் நம்பகத் தன்மையை அறிவதற்காக பல்வேறுவழிகளில் சோதனை நடத்தி தகவல்களைப்பெற முடியுமான நிலையில் பாதுகாப்பை ஒரு சாட்டாகக் கூறி தமிழ் வாலிபர்களை துறைமுகத் தொழில்களுக்குச் சேர்க்க மறுப்பது அநீதியானது.

அதே போன்று கொழும்பில் முன்னணிப் பாடசாலைகளில் தமிழ்ப் பெற்றோரின் குழந்தைகளுக்கு அனுமதி கிடைப்பது மிகவும் சிரமமானதாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# மண்கும்பானில் கணிசமான மக்கள் மீள் குடியமர்வு

1991ம் ஆண்டு தீவகத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக மண்கும்பான் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் கணிசமான பகுதியினர் மீளக் குடி ஏறி உள்ளனர்.

மிகுதி மக்கள் தற்காலிகமாகப்பிற இடங்களில் தங்கி உள்ளனர். இவ்வாறு பிற இடங்களில் தங்கி உள்ள மக்கள் ஏற்கனவே தமது வீடுகள் கூரைகள் முற்றாக உடைக்கப்பட்டு உள்ளதால் தொடர்ந்தும் பிற இடங்களில் உள்ளார்கள். எனினும் அண்மைக் காலங்களில் இவர்களும் மீள்குடி அமரும் நோக்கில் மண்கும்பானுக்கு வந்து தமது காணிகளை துப்புரவு செய்து வருகின்றனர்.

எஞ்சி உள்ள மீதமானவையும் அங்குள்ள கடற்படையினரால் உடைத்து எடுத்து செல்லப்படுகிறது என முறையிடப்படுகிறது.

அத்துடன் மண்கும்பான் பாடசாலைக் கட்டடமும் முற்றாகப்பாதிக்கப்பட்டு உள்ளது. (83-சி)

# ராஜகிரியாவில் பலியான புலிகளது உடல்களை பாதுகாக்க நீதிபதி உத்தரவு

கொழும்பு ராஜகிரியப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்திலும் மறுநாள் இடம்பெற்ற குண்டுவெடிப்பிலும் உயிரிழந்த 8 புலிஉறுப்பினர்களது உடல்களைப் பாதுகாத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகள் கடந்த புதன்கிழமை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது, கொழும்பு சட்டமருத்துவ அதிகாரிக்கு கொழும்புபிரதம நீதிபதி ஜி. டி. குலதிலக இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பணியக இயக்குநரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான பந்துல விக்கிரமசிங்க சமர்ப்பித்த மனுவில், சடலங்களை அடையாளம் காண்பதற்காகவும், விசாரணைகளைத் தொடர்ந்தும் மேற் கொள்வதற்காகவும் சடலங்களை பாதுகாத்து வைக்க சட்டமருத்துவ அதிகாரிக்கு உத்தரவிடுமாறு கோரியிருந்ததை அடுத்தே நீதிபதி மேற்படி உத்தரவினைவழங்கி இருக்கிறார். (க-9)

# குழாய் நீர் விநியோகம்

யாழ். மாநகர சபை எல்லைக் குட்பட்ட பகுதிகளுக்கு நீர்த்தாங்கிகள் மூலம் குழாய் நீர்வழங்கல் திட்டத்தின்கீழ் எதிர்வரும் யூன்மாதம் முற்பகுதிக்குள் நீர்விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை பரீட்சார்த்த நடவடிக்கையாக குழாய்கள் மூலம் நீர்விநியோகம் நடைபெறுவதாகவும் அதனை பொது மக்கள் பாவனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டாம் எனவும் நீர்வழங்கல் பிரிவால் தெரிவிக்கப்படுகிறது.

# கிரிக்கெட் மோதல்; ஆட்ட வீரர்களுக்குக் கிடைத்த பாராட்டு

வடக்கின் மாபெரும் மோதலாக இடம்பெற்ற யாழ்.சென்றல், சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு இடையேயான கிரிக்கெட்போட்டியில் சிறந்ததுடுப்பாட்ட வீடிராக சென் ஜோன்சின் ஏ.டினேஷ் எபநேசரும், சிறந்த பந்து வீச்சாளராக சென்.ஜோன்ஸின் பி. லவேந்திராவும், சிறந்த களத்துடுப்பாளராக சென்.ஜோன்ஸின் பி.பிரதீபனும், சகலதுறை ஆட்டக்காராக சென்றலின்எஸ்.ராஜுவும், ஆட்டநாயகனாக சென்.ஜோன்ஸின் வி.விஷ்ணுவந்தனும்' ஆட்டத்தின் அதியுயர்ஓட்டத்தைப்பெற்ற வீரராக சென்.ஜோன்ஸின்வி.விஷ்ணுவர்த்தனும் அறிவிக்கப்பட்டனர். (சி)

# ஈ. பி. டி. பியினரின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து

# வலி. கிழக்கு பிரதேச சபையில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பம்

(அச்சுவேலி)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரமாண அடிப்படையிலான 6 லட்சத்து 85 ஆயிரம் ரூபா நிதியில்இருந்து வலிகிழக்குப் பிரதேசத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இருபாலை செம்மணி வாய்க்கால் புனரமைத்தல் உரும்பிராய் இந்துக்கல்லூரி ஒழுங்கை திருத்தல், யோகபுரம் குழாய்க் கிணறு திருத்தல் ஜனசக்தி சனசமூக நிலைய மலசலகூடம் புனரமைப்பு என்பன அவற்றில் சிலவாகும். (க-57)

# எம் மண்ணுக்குகீர்த்தி சேர்த்ததுடன் ஒப்பிலா வழிகாட்டியாகத் திகழ்பவர்

## யோகர் சுவாமிகள் பற்றி சிவத்தமிழ்ச் செல்வி

(யாழ்ப்பாணம்)

',ஈடிணையற்ற சித்தரான யோகர் சுவாமிகள் இம் மண்ணிலே இந் நூற்றாண்டில் தோன்றி தனது சீரிய சிவத்தொண்டினால், போதனைகளால் எமக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்பவர்.'' என்று சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்ற யோகர் சுவாமிகள்.குரு பூசையில் அருளுரை நிகழ்த்துகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில் ''யோகர் சுவாமிகள் போன்ற பெரியோரது நற்சிந்தனைகளை இந்துக்கள் அவர்களது குருபூசை தினத்தில் மாத்திரமன்றி எந்நாளும் போற்றி நினைவு கொள்ள வேண்டும். அவர்களது திவ்ய வரலாற்றைப் படித்து வாழ்வை நேரிய நெறியில் செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

சச்சியப்ப சிவாச்சாரியார் பாடிய கந்தபுராணம் மீது. யோகர்சுவாமிகள் மிகுந்த பற்றுக் கொண்டவர். கந்தபுராணத்தைச் சகலரும் படிக்க வேண்டும். அதன் மூலம் அசுரர்களால் துன்பங்கள் நீங்கிதேவர்கள் பெற்ற விமோசனம் கிடைக்கும் என்று வலியுறுத்தி வந்தவர் சுவாமிகள்.

சுவாமிகள் கொழும்புத்துறை யோகர்சுவாமிகள் என்று போற்றப்பட்டவர். எனினும் அவர் அவ்தரித்தது வலிகாமம் வடக்கில் உள்ள மாவிட்டபுரத்தில் சுவாமிகளது சீடர்கள் பலரும் உலக நாடுகள் பலவற்றிலும் இன்றும் சுவாமிகளது கீர்த்தனை நெஞ்சிருத்தி அவரது தெய்வீக நெறியைப் பரப்பி வருகின்றனர்.

நல்லூர் முருகன் மீது அளவிலாப் பக்தி கொண்டவர் சுவாமிகள் நல்லூர் முருகன் ஆலயத்துக்குள் சென்றுதான் வழிபட வேண்டும் என்றில்லை அந்த ஆலய வீதி மண்ணிலே பாதம் பட்டாலே அம்மண்ணிலே உருண்டு புரண்டாலே கந்தன் அருள் கருணை கிடைக்கும் என்று தன் சீடர்களிடம் மொழிவார் சுவாமிகள்.

யோகநாதன் என்ற இயற்பெயர் கொண்ட சுவாமிகள் அரச பணிபுரிந்தவர். பின்னர் அவர் ஞானி என்ற நிலைக்கு உயர்ந்த பின் 'யோகர் சுவாமிகள்' என அடியார்கள் புகழாரம் சூட்டப்பட்டார், போற்றப்பட்டார் நாமனைவரும் அவரது நற்சிந்தனைப் பாடல்களை மனனஞ் செய்தல் மேன்மை தரும். ஆயிலியம் அவரது நட்சத்திரம் அந்நட்சத்திரத்துக்குரியது அவரது குரு பூசை தினம்.

கந்தபுராணம் படித்தால் இப் புவியில் எந்நாளும் துன்பமில்லை என அவர் தனது ஆச்சிரமத்திற்கு வரும் அடியார்களிடம் உபதேசிப்பது வழக்கம் அமைதியின் உறைவிடமாக. மிளிர்ந்தது அவரது ஆச்சிரமம் அங்கு தெய்வீக ஒளி வியாபித்திருக்கும்'' என்று சொன்னார். (சி)

# திறந்த வெளிப் பல்கலைக் கழக

# இயந்திர வியல் கற்கை நெறிககான விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்கமுயற்சி

திறந்த வெளிப் பல்கலை கழகத்தில் இயந்திரவியல் தொழில் நுட்பக்கற்கை நெறியை பயில்வோருக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேற்படி அமைப்பின் யாழ். பிராந்திய இயக்குநர் ச. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நேற்றுடன் முடிவடைந்த போதிலும் யாழ். மாவட்ட மாணவர்களின் நன்மை கருதி விண்ணப்ப முடிவு திகதியை நீடிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம். என்று தெரிவித்தார்.

6 வருடங்களைக் கொண்டதான இக்கற்கை நெறி முதன் முதலில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இங்கு குறிப்பிடத்தக்கது. (க-3)

# குழாய் நீர் விநியோகம்

(அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கு இருபாலை கிழக்கு ஆகிய பிரதேசங்களுக்கு குழாய் நீர் விநியோகிப்பதற்கான ஆய்வினை மேற்கொள்ள 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (க-57)

ஒரு சமூக உளவியல் தரிசனம்

# மகிழ்ச்சியான வாழ்வுக்குப் பரஸ்பரம் இணங்கிப் போதலே வழிகோலும்!

அருட்பணி எஸ். கே இராஜநாயகம்
அகவொளி குடும்ப வகை துணை நிலைய இயக்குனர்

எமது வாழ்வில் இணங்கிப் போதலுக்குரிய மதிப்பீட்டிற்கும். இணங்கிப் போகாத்தன்மைக்குரிய மதிப்பீட்டிற்கும் இடையில் ஒரு முறுகல் நிலை ஏற்பட்டுச் சிக்கித் தவிப்பதை நாம் காண்கின்றோம். நாம் வைத்திருக்கின்ற மதிப்பீடுகள் பிறர் வைத்திருக்கின்ற மதிப்பீடுகள் சில வேளைகளில் ஒத்திருக்கின்றன. அல்லது வேறுபட்டிருக்கின்றன. ஒத்திருக்கின்ற போது இணங்கிப் போகின்றனர். வேற்றுமையாக இருக்கின்றபோது முரண்படுகின்றனர். ஆனால் வேற்றுமையிலும் சிலர் இணங்கிப் போகின்றனர்.

## சமூக உளவியல் நோக்கு

ஒரு பெரிய குளத்தின் அணைக்கட்டிலிருந்து ஒருவன் இறங்கி ஒரு வீதியில் ஓடத் தொடங்கினான். இவனைப் பார்த்த இன்னொருவனும் ஓடத்தொடங்கினான். இவர்களைப் பார்த்த மற்றவர்களும் ஓடத்தொடங்கினர். ஒருவன் இவர்களின் ஓட்டத்தின் காரணத்தை அறிய முற்பட்டான் 'ஏன் ஓடுகின்றாய்' என்று ஓடுகின்றவனை வினவ அவன் தனக்குத் தொரியாது என்றான். இன்னொருவனை விசாரித்தபோது 'பின்னால் வருபவரை கேட்டுப் பாரும்' என்றான். இதில் இன்னொருவன் 'எனக்குத் தெரியாது கடவுளுக்குத்தான் தெரியும்' என்றான். ஆதில் இன்னொருவன் அணைக்கட்டு உடைத்து விட்டது அதுதான் ஓடுகின்றேன் என்றான் ஆனால் உண்மையில் ஒன்றுமே நடக்கவில்லை. ஒருவன் ஓடினபடியால் காரணம் அறியாமல் மற்றவரும் ஓடினார். அதைப்பார்த்து மற்றவரும் ஓடினர். இக்கதையில் நாம் இணங்கிப் போகின்ற ஒரு தன்மையை காண்கின்றோம். இணங்குதலுக்குரிய காரணங்கள் எம்மைக் காப்பாற்ற நாம் இணங்குகின்றோம். பல ஆபத்துக்களில் இருந்து விலக நாம் இணங்குகின்றோம். இப்படியாக இணங்கிப் போகின்றவர்களை ஒரு 'குழுவில் உள்ள விளையாட்டு வீரன்' என அழைக்கலாம். [Team Player] 1950களில் பிரசுரமான புத்தகங்களில் அமெரிக்கா ஜனாதிபதி யோண் எவ் கெனடி எழுதிய Profiles in Courage என்ற புத்தகம் மிகவும் பிரபல்யமானது. இதில் அவர் ஒத்துப்போகாதவர்கள் பற்றி அவர்களுடைய அரசியல் ஞானத்தைப்பற்றி. அவர்களுடைய அதீத வீரத்தைப் பற்றி புகழ்கின்றார் ஒத்துப்போகாதவர்களை சமூகம் உடனடியாக விரும்பாது உ-ம் பூமி தட்டைவடிவமானது என்ற கோட்பாடு காலதிகாலமாக இருந்து வந்த ஒரு கோட்பாடு. ஆனால் கல்லியோ பூமி உருண்டை வடிவமானது என்று உலகுக்குத் தெரிவித்த போது உலகம் அதை எதிர்த்தது. அவரை சிறையிலும் அடைத்தது, பிற்காலத்தில் பூமி உருண்டை வடிவமானது என்ற கருத்தே உண்மையானது என்று ஏற்றுக் கொண்டனர். பழமையில் ஊறி வாழ்கின்றவர்கள், வரும் இடர்களை எதிர்கொள்ளும் துணிவு அற்றவர்கள் இணங்கிப் போகாதவர்களுக்கு பெரும் எதிர்ப்பு இருக்கும். அதே நேரத்தில் அவர்கள் பாராட்டபட மாட்டார்கள். சரித்திர ஆய்வளார்கள் தான் அவர்களை பலகாலத்திற்குப் பின்பு போற்றுவார்கள்.

## அடிப்படை உண்மை

இதில் பல ஆராய்ச்சிகளை நடாத்திய சமூக உளவியாளாளர்கள் ,இணங்கிப் போகின்றவரை ஒரு 'குழு' அல்லது ஒரு 'அமைப்பு' விரும்புகின்றது என கண்டறிந்தனர். சில சந்தர்ப்பங்களில் இணங்கிப் போதல் விரும்பத்தக்கது அதே சமயத்தில் சில சந்தர்ப்பங்களில் இணங்கிப் போகாவிட்டால் பெரும் பேரழிவு ஏற்படுகின்றது உ-ம் வீதி ஒழுங்குக்கு அமைய வாகனங்கள் இடது பக்கம் செலுத்தப்படல் வேண்டும். இந்த விதிக்கமைய எல்லா வாகன சாரதிகளும் இணங்கிப் போகின்றனர். இங்கு ஒருவன் இணங்கிப் போகாத் தன்மையில் எதிர்த்து செயல்பட்டால் இங்கு பேரழிவு ஏற்படுகின்றது,

சிலரின் செயற்பாடுகள் இணங்கிப் போகும் தன்மைக்கு எதிரானவை. உ-ம் ஒருவர் சொன்னதற்காக வேண்டி எதிர்மாறாக நடத்தல். உ-ம் பெற்றோருடைய விருப்பத்திற்கு எதிர்மாறாக நடத்தல். இணங்கிப் போதல் எல்லா இடத்திலும் எல்லா நேரத்திலும் நல்லது அல்லது கூடாததுஎன்பதுஎமதுகருத்து அல்ல. இணங்கிப் போதல் சில நேரங்களில் பேரழிவுகளை கொண்டு வரும். உ-ம் கிட்லரின் ஆட்சியில் அவரின் நெருங்கிய வட்டத்திலுள் இருந்தவர்கள் எப்பொழுதும் இணங்கிப் போகின்ற தன்மையைக் கொண்டிருந்தனர். இவர்கள் உலகம் வெறுக்கக் கூடிய மிருகத்தனமானசெயல்களை செய்தனர்பலகோடி மக்களை நச்சுவாயுகொண்டு கொன்று குவித்தனர் ஏன் இப்படிச் செய்தனர் என்று பின்பு விசாரித்த போது தாம் தம் உயர் அதிகாரிகளுக்கு கீழ்ப் படிந்தனர் என்று தம் செயல்களை நியாயப்படுத்தினர். இங்கு எல்லாரும் கூடி நடந்து கொண்டவைகள் எல்லாம் பிழை என்று சில ஆட்களில் பழி சுமத்தலாம். இது மிகச். சுலபம் ஆனால் இந்த செயல்களில் தீர்மானங்களின் அடிப்படைகளை நாம் நோக்குவது பயன்தரும் இனி நாம் செய்யும் செயல்கள். எடுக்கும் தீர்மானங்கள் நல்லவைகளாக இருக்கும்.

ஒருவர் அல்லது பலரிடமிருந்து வருகின்ற உண்மையான அல்லது கற்பனையினாலான அழுத்தத்தால் ஒருவரின் நடத்தையில் ஏற்படும் மாற்றமே இணங்கிப்போதல் ஆகும். இணங்கிப் போகின்றவர் தமது தீர்மானம் அல்லது செயல் நல்லது எனக் கருதியிருக்க வேண்டும். இன்னும் இணங்கிப் போதலுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளாவன! ஒருவர் தன்னை மற்றவர் ஏற்க வேண்டும், விரும்ப வேண்டும், நல்லவர் என எண்ண வேண்டும். என தன்னைப் பற்றி ஆவல் கொண்டவராக இருப்பார். இணங்கிப் போகாவிட்டால் மற்றவர் தன்னை வெறுப்பார் என்று பயமுள்ளவராக இருப்பார். ஒருவர் தன்னைப் பற்றி தாழ்வு மனப்பான்மை கொண்டவராக இருந்தால் அவர் அனேகமாக மற்றவரின் அழுத்தத்திற்கு இணங்கிப் போவார். ஒருவர் இன்னொருவருக்கு இணங்கிப்போவார் என்றால் அந்த இன்னொருவர் நிபுணராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் தனக்கு வேண்டியவராக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அவர் ஒப்பிட்டளவில் தன்னை விட மேலானவராக இருக்க வேண்டும். ஒருவர் தண்டனையை தவிர்ப்பதற்காகவெகுமதியை பெறுவதற்காக மற்றவரின் அன்பை அடைவதற்காக இணங்கிப் போவார். இதைவிட பிறரின் ஆர்வமும் எதிர்பார்ப்பும் வெளி அழுத்தங்களும் ஒருவரை இணங்கிப் போகச் செய்யலாம். இன்னுமொருவர் ஒரு குழுவால் ஓரளவுக்கு மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருந்தால் இவரில் இக்குழுவிற்கு இணங்கிப் போகும் தன்மை கூட இருக்கும். முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டால் அவரில் ஒத்துப் போகாத் தன்மை கூட இருக்கும். உதாரணம் ஒருவர் ஒரு ஸ்தாபனத்தில் ஆரம்பத்தில் மேலதிகாரியின் கட்டளைகளுக்கு ஒத்துப் போகக் கூடியவராகவும் அதே நேரம் 2,3 வருடங்களின் பின் மேலதிகாரியிடமே எதிர்வாதம் புரிபவராகவும் இருப்பார்.

சமூக உளவியலின் இணங்கிப் போதலின் இந்த அடிப்படைக் கருத்துக்களை கவனத்தில் கொண்டு குடும்ப வாழ்வை நோக்குவோம்.

குடும்பம் ஒரு அமைப்பு. இந்த அமைப்பின் அங்கத்தவராக கணவன் மனைவி பெற்றார் பிள்ளைகள் இருக்கின்றனர். இந்த அமைப்பில் இணங்கிப் போதல் கணவன் மனைவிக்கிடையில் பெற்றார் பிள்ளைகளுக்கிடையில் இல்லாவிட்டால் குடும்பத்தின் சமநிலை பாதிப்புறும். ஒரு கணவன் அல்லது மனைவி தனக்கு இணங்கிப் போகின்ற துணையையே விரும்புவர். பெற்றார் தங்களுக்கு இணங்கிப் போகின்ற பிள்ளைகளையே விரும்புவர். பிள்ளைகளும் தங்களுக்கு இணங்கிப் போகின்ற பெற்றோர்களையே விரும்புவர். கணவன் மனைவி உறவில் இணங்கிப் போதலுக்கு எதிரானவர் இருக்க முடியாது. கணவன் மனைவி என்ற ஆளுமை வளர்ச்சிக்கு ஏற்றவாறு அமைவான காரியங்களுக்கு ஒருவருக்கொருவர் இணங்கிப் போகின்றவராக இருக்க வேண்டும், திருமண வாழ்விற்கு 3 அம்சங்கள் முக்கியமானவை:- அவை பிரிதல், இணைல், ஒன்றித்தல்.

## பிரிதல்

திருமணத் தம்பதிகள் திருமணம் முடித்த பின் எல்லா உறவுமுறைகளிலும் அவர்கள் மாற்றம் காண்கின்றனர். எனவே திருமணம் முடிக்கும ஒருவர் தனது துணைக்குத் தான் முதன்மையான இடத்தையும் முதன்மையான உறவையும் கொடுப்பார். திருமணம் முடிப்பதற்கு முன் எவர் ஒருவரை முதன்மையாக வைத்து முதலிடத்தைக் கொடுத்தார்களோ அவர்களை விட்டு திருமணம் முடித்த பின் தம் தம்பதிக்கே முதலிடத்தை கொடுக்க வேண்டும். இல்லையென்றால் திருமணம் முடித்த ஒருவர் தனது தம்பதியை அல்லாமல் தன் பெற்றார், சகோதரர், நண்பர்க, ஆகியோருக்கு இணங்கிப் போகின்றவராக இருந்தால் குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாகுவதை எவராலும் தடுக்க முடியாது. தம்பதிகளில்தான் ஒருவர் ஏற்கனவே வைத்திருந்த முதன்மையான உறவில் இருந்து உள்ளத்தளவில் "பிரிந்து" வராவிட்டால், பிறருக்கு இணங்கிப் போகும் தன்மையால் குடும்பவாழ்வில் இத் தம்பதியர் இணங்கிப்போகும் பல குறுக்கீடுகளைச் சந்திப்பர். இதனால் இவர்களின் குடும்ப உறவும், வாழ்வும் பாதிப்புறும் இவர்களின் குடும்ப வாழ்வில் பிறரின் ஆதிக்கம் மிகுந்த பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். இன்று எத்தனையோ குடும்பங்கள் இப்படியான பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றனர். அப்படியாயின் குடும்ப சமநிலைக்கு தம் தாம்பத்திய வாழ்விற்கும் ஒருவருக்கொருவர் இணங்கிப் போதல் எவ்வளவு முக்கியமானது என்பது புலனாகின்றது.

## இணைதல்

இணைதல் அதாவது "ஒன்று கூடி வருதல்" எப்போதும் "பிரிதலை" முன்னெடுக்கின்றது. 'பிரிதல்' ஏற்பட்டால் தான் இணைதல் அல்லது 'ஒன்று கூடுதல்' வரும் பிரிதல், இணைதல் அன்பின் அடிப்படையில் நிகழ்கின்றதொன்று. குடும்ப வாழ்வில் அன்பு தான் முக்கியமானதாகும். இது இல்லையென்றால் அங்கு இணங்கிப் போகும் தன்மை இடம் பெறாது. இணங்கிப் போதலுக்கு எதிராக செயல்படுபவர். கணவனோமனைவியோ அல்லது பிள்ளைகளோ குடும்பத்தில் ஒருவர் ஏதோ ஒரு விடயத்தை சொல்லி விட்டார் என்பதற்காக அதற்கு எதிர்மாறாக செயல்படுவர். ஆனால் அன்பு ஒருவர் ஒருவருக்கு இணங்கிப் போக வைக்கின்றது. உண்மையான அன்பை புரிந்து கொள்கின்றவர் மிகச் சிலர். உணர்வில் அல்ல. கவர்ச்சியில் அல்ல. அறிவில் அல்ல மாறாக அன்பு தீர்மானத்தில்தான் உள்ளது. நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய தீர்மானிக்கின்றோம். அன்பு செய்கின்றவர் தன்னை ஒரு போதும் நினைப்பதில்லை. அவர் எப்பொழுதும் தனக்குரியவரை நினைத்திருப்பார். தனக்குரியவரின் மகிழ்ச்சி, உறவில் வளர்ச்சி, வாழ்வில் உயர்ச்சி இவைகளில் மிகவும் கரிசனையுள்ளவராக இருப்பார். மற்றவர் இவைகளை அடைவதற்கு தம்மையே அர்ப்பணித்து செயல்படுவார்.

இப்படியாக கணவன் மனைவி வாழ்கின்றபொழுது தங்கள் உறவின் வளர்ச்சி, வாழ்வின்உயர்ச்சி, மகிழ்ச்சிக்குரிய விடயங்களுக்கு ஒருவரோடு ஒருவர் ஒத்துப்போவர். ஒருவரை ஒருவர் மதிக்கின்ற முறைகள் தேவைகளை நிறைவு செய்கின்ற விதங்கள். ஒருவர் ஒருவரை மகிழ்ச்சியாக வாழ்வதற்கு உருவாக்கிக் கொடுக்கின்ற சூழல்கள், இவைகள் அனைத்தும் ஒருவர் ஒருவருக்கு இணங்கிப் போகின்ற தன்மையை கொடுக்கின்றது. இப்படியாக ஒருவர் எப்போதும் மற்றவரின் எண்ணமாகவே இருப்பார். தன்னையே அழித்து மற்றவரைக் காப்பாற்றுகின்ற அன்புஇணங்கிப் போகும் தன்மையை கூட்டி குடும்ப வாழ்விலே ஒரு மகிழ்ச்சியை கூட்டுகின்றது. ஒரு "உள்வியலாளாரின்" கூற்றுப்படி ஒருவர் தன்னைப் பற்றி 24 மணி நேரமும் சிந்தித்துக் கொண்டிருந்தால் அவர் திருமணம் முடிக்காமல் இருப்பது நல்லது எனக் கூறுகின்றார். ஒருவர் தன்னையே பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பவர் இணங்கிப் போகாத் தன்மையை கொண்டிருப்பார். இதனால் குடும்பம் சமநிலை இழந்து நிம்மதி இன்றிக் காணப்படும்.

## ஒன்றித்தல்

மேற் கூறப்பட்ட பிரிதல், இணைதலின் உச்சக்கட்டம் தான் ஒன்றித்தல். இது ஒருவருடைய பாலியல் வாழ்வு. இணங்கிப் போதலின் உச்சக்கட்டம் தான் பாலியல்உறவு. பிரிதல், இணைதல் அமைவாக இருந்தால் பாலியல் வாழ்வு நிறைவு தரும் .இங்கு தம்பதிகளில் ஒருவர் மற்றவரால் நடத்தப்படுகின்ற விதங்களால் பாதுகாப்பு, நம்பிக்கை என்ற உணர்வுகள் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றன. இந்த பாதுகாப்பு நம்பிக்கை என்ற உணர்வுகள் ஆரம்பத்தில் பெற்றோர்-குழந்தை உணர்விலே பெற்றுக் கொண்டாலும் இங்கு ஒருவர் ஒருவரால் நடத்தப்படுகின்ற விதங்கள் ஒருவர் ஒருவர் மீது கொண்டிருக்கின்றகரிசனையின் அளவுகள். ஒருவர் மீதுஒருவருக்கு ஏற்படுகின்ற திருப்திகள் ஒருவரின் தேவைகள் மற்றவர் நிறைவேற்றும் விதங்கள் குறித்து ஏற்படுகின்ற உணர்வுகளே நம்பிக்கையும், பாதுகாப்பும் ஆகும். 'நான் என் துணைக்கு மிகவும் வேண்டிய ஒருவர்' என்ற உணர்வும் மிகவும் முக்கியமானதாகும்- இவைகள் ஒரு தம்பதியருக்கு அமையும் இடத்தில் பாலியல் வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் இணங்கிப் போவர். மேற்சொன்னவைகள் இல்லாவிடத்து ஒருவர் ஒருவரோடு இணங்கிப் போகாத்தன்மை ஏற்பட்டு ஒருவர் ஒருவரை தொட்டுப் பேசுவதையே வெறுப்பர். இங்கு பாலியல் வாழ்க்கை ஒருவர் ஒருவநக்கு திருப்தியோ, மகிழ்ச்சியோ தராது மாறாக அங்கலாய்ப்பையும் அதிருப்தியையும் உண்டாக்கும்.

இன்று அன்பு இல்லாமல் பல குடும்பங்கள் வாழ்வதை நாம் காணலாம். இதன் அடிப்படைகளை ஆராய்கின்ற பொழுது இனி 'திருமணம் செய்து விட்டோம், பிள்ளைகளைப் பெற்று விட்டோம்' என்றும் சமுதாயத்தின் ஆர்வமும், எதிர்பார்ப்பும்,அழுத்தங்களும் இந்தக் குடும்பத்தை குடும்பமாகவே பார்க்க விரும்புவதால் இவர்கள் 'ஏதோவந்து விட்டோம் வாழ்வோம்' என வாழ்கின்றனர். இங்கே நாங்கள் சமுதாயத்தின் அழுத்தங்களுக்கும், ஆர்வங்களுக்கும் இணங்கிப்போவதைக் காண்கின்றோம். ஒருவர் தனது குடும்ப வாழ்வில் வன்முறையைப் பாவிப்பாரானால் மற்றவர் அந்தத் தண்டனையைத் தவிர்ப்பதற்கு இணங்கிப் போவார்.

ஆண் ஆதிக்கத்தில் சிக்கித் தவிக்கின்ற எமது சமுதாயத்தில் பெண்கள் மட்டும் ஆண்களுக்கு இணங்கிப் போகின்றவராகக் கணிக்கப்படுகின்றனர். ஆண்வர்க்கம்எது செய்தாலும் ஆண் ஆதிக்க சமுதாயம்அதை நியாயப்படுத்துகின்றது. இத்தகைய மனப்பாங்கு ஆரோக்கியமானதல்ல. குடும்பம் என்று வந்து விட்டால் ஒருவர் மற்றவருக்கு இணங்கிப் போதலே மகிழ்ச்சியான வாழ்விற்கு அடிகோலும். ★

## மெய்வல்லுநர் போட்டி

(ஊர்காவற்றுறை)

காரைநகர் சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி க. காராளசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஆர்.எல். தேவதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ-75)

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவா உண்டேல் உண்டாம் சிறிது.
- குறள்

வலம்புரி

## கலங்கியகுளத்தில்

கலங்கிய உளங்கள் தெளியாத நிலையில். தேறுமா உள்ளம் என்று விசனிக்கும் வேளை சுய நிர்ணய உரிமை எப்பொழுதாவது, யாராலும் ஏற்றுக் கொள்ள வேண்டிய தொன்று. கடந்த கால கஷ்டங்களிலெல்லாம் முளைத்த ஒப்பந்தங்கள் அரசியல் வ்வேக முள்ளவையாயினும் முதுகெலும்பற்ற கோணற் புத்திகளால் ஒப்பந்தங்கள் சாக்கடையிற் சரணாகதியடைந்தன.

இன்லறக்கு பஞ்சசீலம் போதித்த புத்தன் வழி வந்த பௌத்த குருமார்கள் பித்தர்களாய்ப் பிதற்றுவது வேதனைக்கு உரியதல்ல இரு மறைத் தொழிற்பாடு ஒரு நேர் தொழிற்பாட்டைத் தானே தந்து நிற்கும் இவர்கள் மதம் பிடித்தவர்கள் போல் அடம்பிடித்தால் தட்டிப்பொசிய வேண்டியது தானாய் பொசியும் நிலைக்கு வந்து விடும். நாம் கூறுவது பிரிவினைக்கு உந்து சக்தியாக இருக்கிறார்கள் என்பதனையேயாகும்.


வரலாற்றுப் பின்னணிகளை நன்கு புரிந்து கொண்டு அரசியல் பேசினால் உண்மை துலங்கும் இடதுசாரிகள் தொண்டைகிழியக்கத்திய கருத்துக்களைக் காற்றில் பறக்க விட்டிருக்கிறார்கள் அரசியல்யாப்பை ஆக்கும் போது. கொல்வின் என். எம். போன்றோர் இருந்து எதனைக் கிழித்தார்கள்.

துரோகத்தனமாக வஞ்சக நெஞ்சொன்று நாட நாவொன்று சொன்ன மாதிரியல்லவா நிலமை போய்விட்டது இன்றைக்கு அவர்கள் விதைத்ததை அறுக்கின்ற அவல நிலையில் நாடு தவிக்கிறது இவை எல்லா வற்றையும் மேவி நாட்டின் நலன் கருதி நல்லன செய்யத் துடிக்கின்றார் சந்திரிக்கா என்று தோன்றுகிறது.

பலதடவைகள் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப் பட்டிருக்கிறார்கள். சுய நலம் என்றால் என்ன என்று வினாவுமளவுக்கு மெழுகுவர்த்தி போல் வாழ்ந்து தன்னை அழித்துக் கொண்டவர் தந்தை செல்வா. தமிழினத்தின் விடிவை காணத்தலைப் பிட்டவர் தான் புரிந்துணர்வில்லா. ஏமாற்றுக் காரர்கள் இருந்தகாரணத்தால் பஸ்ஸைத் தவற விட்டார். இப்போதும் இனத்தை அடகு வைக்காத தன்னிலை தாழா வாழ்வொன்றேதமிழினம் வேண்டுவது.

அன்புடன் ஆசிரியர்

## தேர்த்திருவிழா



ஆலய விழாவாகத் தேர் இழுப்பதை நாம் நமது உடம்பை ஒட்டிய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் தேரில் இருப்பது போல நமக்குள்ளும் இறைவனின் பிம்பம் இருக்கிறது. தேரை இழப்பது போல ஆசா பாசங்கள் நம்மையும் இழுக்கின்றன. தேருக்கு முன்னால் செல்லும் இசையும், நாட்டியமும்போல நமது வாழ்க்கையிலும் பல்வேறு குடும்பப் பண்டிகைகளும், விழாக்களும் நடைபெறுகின்றன ஊர்வலம் முடிந்ததும் சுவாமி திரும்ப ஆலயத்துக்குள் போய் விடுகிறார். வாழ்க்கை முடிந்ததும் நமது ஆத்மாவும் அது வரை வாழ்ந்த உடலை விட்டு இறைவனிடம் திரும்பி விடுகிறது.

பகவான் பாபா

கொடியேற்ற விழாவுடன் 8-3-2000 அன்று ஆரம்பமான வருடாந்த மகோற்சவம் இன்றைய தேர்த்திருவிழாவுடனும், நாளை நடைபெறும தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும்.

23-3-2000 திருவூஞ்சல் பூங்காவன உற்சவமும்
24-3-2000 வைரவர் உற்சவம்
25-3-2000 மகேஸ்வர பூசை

பரிபாலன சபையினர்.

## அன்பை விதைக்கும் அன்னை

பக்தர்கள் எந்த வடிவில் வணங்கினாலும் அருள் புரிவார். என்று கண்ணபிரான்



பகவத்கீதையில் குறிப்பிட்டுள்ளார். உண்மை ஒன்றே பல்வேறு பெயர்களில் முனிவர்கள் அழைக்கிறார்கள் என்று ரிக்வேதம் கூறுகிறது. தந்திரங்கள் சக்தியை பெண் தெய்வமாக வர்ணிக்கின்றன.

இந்த பிரபஞ்சத்தை உருவாக்கி நடத்திச் செல்லும் புவனேஸ்வரி அம்பிகை பிரம்மத்திடமிருந்து பிரிக்க முடியாதவர் இன்று நம்மிடையே அம்மாவாக அவதரித்து நமக்கெல்லாம் வழிகாட்டுகிறார். வெறுப்பைப் போக்கி அன்பை விதைப்பவர் ஐயத்தை அகற்றி நம்பிக்கையைத் தோற்றுவிப்பவர் மனவருத்தத்தை நீக்கி மகிழ்ச்சி காண செய்பவர் ஆறுதல் தந்து ஆனந்தம் அடைய செய்பவர். மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து இந்த பிரபஞ்சத்தின் அற்புதங்களை புரிந்துகொள்ள முயன்றுவருகிறான். அந்த அற்புதங்களைப் புரிய வைப்பதற்கு சற்குரு தேவை நமக்கு அவற்றை விளக்கிக் காட்டும் ஆன்மீக குருவாக ஆயிரம் இதழ்த் தாமரையில் அமர்ந்து தேரேறி வரும் அம்பிகையிடம் சரணடைந்து நாமும் எம் இனத்தவரும் மேன்மை அடைய பிரார்த்திப்போமாக.

செல்வா

## அம்பிகை தோத்திர பாமாலை

இராகம்:- செஞ்சுருட்டி தாளம்:- ஆதி

ஸ்ரீ சக்ர ராஜ சிம்மாச னேஸ்வரி
ஸ்ரீலலிதாம்பிகையே - புவனேஸ்வரி
ஆகம வேத கலாமய ரூபிணி
அகில சராசர ஜெனனி நாராயணி
நாக கங்கண நடராஜ மனோகரி
ஞான வித்யேஸ்வரி ராஜராஜேஸ்வரி
(ஸ்ரீ சக்ர)

இராகம்;- நாதநாமக்கிரியை

பலவிதமாய் உன்னை பாடவும் ஆடவும்
பாடிக் கொண்டாடு மன்பர் பாதமலர்
சூட்டவும்
உலக முழுதும் என் அகமுறக் காணவும்
ஒருநிலை தருவாய் காஞ்சி காமேஸ்வரி
(ஸ்ரீ சக்ர)

இராகம்:- புன்னாகவராளி

உழன்று திரிந்தஎன்னை உத்தமனாக்கி வைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றிடக்கூட்டி வைத்தாய்
நிழல்என தொடர்ந்த முன்னோர் கொடுமையை
நீக்கச் செய்தாய்
நித்ய கல்யாணி பவானி பத்மேஸ்வரி
(ஸ்ரீ சக்ர)

இராகம்:- சிந்துபைரவி

துன்ப புடத்தில் இட்டு தூயவன் ஆக்கி வைத்தாய்
தொடர்ந்த முன் மாயம் நீக்கி பிறந்த பயனைத்
தந்தாய்
அன்பை புகட்டி உந்தன் ஆடலைக் காணச் செய்தாய்
அடைக்கலம் நீயே அம்மா அகிலாண்டேஸ்வரி
(ஸ்ரீ சக்ர)

## சிந்தையதிலுள்ள இடர் செகமதிற் தீர அருள்

நீரேறு திருமுடியும் கூரான இருவிழியும்
நிகரற்ற பொன்னின் வடிவும்
நித்தமுன் பாதமலரிற் பித்தாகி யேநின்று
நினைப்பவர் நெஞ்சு றைந்தே
சீராரும் அருட்சோதிப் பேரான மறைபோற்றத்
தாய்தந்தை யாகி நின்றே
சிந்தையதி லுள்ளஇடர் செகமதனில் நீங்கிநாம்
செம்மையுறு வாழ்வு காண
ஏரோடுங் கழனிசெஞ் சாலியத னால்மூடும்
எழிலான வளமும் அரசும்
எண்ணுதவ யோகமும் நண்ணிகற் கதிசேர
எழுந்த சிவஞான வடிவே
தேரேறி யெம்மலங்கள் நீறாக அருளவரும்
ஸ்ரீபுவ னேசு வரியே
திகழ்வேலம் பிட்டியதிற் பாணாங் குளத்திலுறை
திருநாச்சி யம்மைத் தாயே

நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்.

(யாழ். நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய தேர் உற்சவம் இன்றாகும்.)

# மலச் சிக்கலால் அவதிப்படுவோருக்கு ஆறுதல் தரும் ஆலோசனைகள் சில;

வைத்திய கலாநிதி ஏ. இராஜேஸ்வரி

இது ஒரு நோய்என்றுகருத முடியாது. எனினும் பலர் மலபந்தத்தால் கஷ்டப்படுகிறார்கள். நாம் உண்ணும் உணவு 18 மணி நேர முதல் 24மணி நேரத்திற்குள் மலமாகி வெளியாவது தான் சாதாரண வழக்கம் ஆகும். சிலருக்கு இது அசாதாரணமான முறையில் பலருக்கு பல சிக்கல்களைக் கொண்டு வந்துவிடுகிறது. வழக்கமாக எல்லோருக்கும் உணவுக்குத் தகுந்தபடி மலம் இருக்கும். தினம் ஒன்று அல்லது இரண்டுவேளை மலம் கழியவேண்டும். அப்படி இல்லாமல் இரண்டு மூன்று நாள் தங்கி மலம் வெளியானால் அதை மலச்சிக்கல் என்கிறோம், வெளியாக வேண்டிய மலம் அதிக நேரம் பெருங்குடலில் தங்கிவிட்டால் உடலில் நேரக்கூடாதவையும் நோய் உண்டுபண்ணக் கூடியவையுமான பலவித விஷங்கள் இரத்தத்தில் சேர்ந்து விடுகின்றன. மேலும் மலம் பெருங்குடலில் தங்கி இறுகிக் கட்டியாகிவிட்டால் பலவிதச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. வயிற்றில் கனம் அதனால் நரம்புகளுக்குச் சங்கடம் முதலிய பலவித பிரச்சனைகள் ஏற்படுகின்றன

### காரணங்கள்

பலகாரணங்களினால் மலச்சிக்கல் ஏற்படலாம் அநேகமாக உணவுக்கோளாறுகளால் தான் ஏற்படுகிறது. இலகுவில் சமிக்கப்பட்டு மலம் அதிகமாக உண்டாக்காத உணவு, அளவிற்கு மிஞ்சி மலம் உண்டாகக் கூடிய உணவு, உயிர்ச்சத்துக்கள் குறைவான உணவு, தேவையான தண்ணீர் குடிக்காமல் இருப்பது, நரம்பு மண்டலத்தைச் சேர்ந்த நோய்கள் இது மாதிரிப் பல காரணங்களால் மலச்சிக்கல் உண்டாகும். பெருங்குடலில் மலம் சேர்ந்து உருவாகி குறிப்பிட்ட காலத்தில் நம் கவனத்தையும உதவியையும் கொண்டு வெளி வருகிறது. சேர்ந்திருக்கும் மலத்தை வெளியே தள்ளுவதற்கு நாம் முயல்வதோடு பெருங்குடலின் தசைகளும் உள்ளிருந்து குடல் குழாயை சுருக்கி மலம் வெளியே வரும்படி செய்யவேண்டும். குடல் தசைக்கு பலவீனம் ஏற்பட்டால் மலத்தைத் தள்ளும் சத்தி குறைகிறது.

### அறிகுறிகள்

இந்நோய்பால் பல உபத்திரவங்களை உண்டுபண்ணக் கூடியது ஆனால்எல்லாக்குறிகளும் மலச்சிக்கல் உள்ள ஒவ்வொருவரிடமும் காணப்படுவதில்லை. பொதுவான அறிகுறிகள் சில அவை பின்வருவன! தலைவலி, நாக்கு தடிப்பு, சுறுசுறுப்பின்மை, வயிற்றுசங்கடம், வயிற்று வலி, பசியின்மை போன்ற இன்னும் பல.

### சிகிச்சை முறை

முக்கியமான உணவை மாற்றுவதாலும்' பழக்கவழக்கங்களை மாற்றுவதாலும் தான் இந்நோயை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

மலம் கழியும் நேரம், குறிப்பிட்ட காலத்தில் அமைய வேண்டும். மலத்தை வெளி வராமல் அடக்கும் பழக்கம் கெடுதி விளைவிக்கும்.

வேலைத் தொல்லையாலோ, பொறுமையின்மையாலோ சிலர் மலத்தை அடக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். மலம் அதிகமாக இறுகாமல் இருக்கப்பழகிக் கொள்ள வேண்டும்.

நார்பதார்த்தங்களான உணவுகள், மரக்கறி, கீரை வகை, பழவகை இவற்றை உணவில் சேர்த்துக் கொண்டால் மலம் இறுகாமல் இருக்கும். போதிய அளவில் தண்ணீர் குடிக்கவேண்டும்.

வில்வம்பழம், பேரீச்சம் பழம் இவை மலத்தை இழகச் செய்துசுலபமாகமலத்தை வெளியே வரும்படி செய்கின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ மட்டக்களப்பில் இராணுவம்:-

# வீதிகளை துப்பரவாக்கும் பணியில் மக்களை ஈடுபடுத்திவருகிறது

## எம்.பியிடம் மக்கள் முறைப்பாடு

(கல்முனை)

மட்டக்களப்பு பிரதான வீதியில் பிள்ளையாரடிக்கும் தன்னா முனைக்குமிடையில் வீதியின் இருபுறத்திலும் உள்ள பற்றைகள், மரஞ்செடிகளை வெட்டுவதற்கு பொது மக்களை அவர்களி விருப்பத்திற்கு மாறாகப் பயன்படுத்தி வருவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சத்துருக்கொண்டானில் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலைத் தொடர்ந்தே மேற்படி வீதித்துப்பரவுப் பணி இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்காடு வெட்டும் பணிக்கு பிள்ளையாரடி, கொக்குவில் சத்துருக்கொண்டான் கிராம மக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன்.

அதிகாலையில் மேற்படி கிராமங்களை சுற்றிவளைக்கும படையினர் மக்களை அழைத்துச் செல்வதாகவும் அவர்களைக் கொண்டு துப்பரவுப் பணியை மேற்கொண்டு வருவதகவும் மக்கள் பாராளுமன்ற உறுப்பினருக்கு புகார் செய்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

(வ. ச.)

### கிராமஉத்தியோகத்தர் கோரிக்கை

அரசாங்க ஊழியர்களுக்கு 63 வயது வரை சேவை நீடிப்புவழங்கப்படுவது போல் வடகிழக்கில் பணியாற்றும் கிராம உத்தியோகத்தர்கள் தங்களுக்கும் வழங்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்குக்கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு 55 வயதில் ஓய்வு பெற்ற பின்னர் 63 வயது வரை சேவை நீடிப்பு ஒன்றை ஏன் வழங்கக் கூடாது என்று கேட்டுள்ளனர்.

(வ)

# இந்திய மீனவர் மூவர் நேற்று நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட மூன்று இந்திய மீனவர்கள் நேற்று யாழ். மாவட்ட நீதிபதி ஆர். ரி. விக்கினராசா முன்னிலையில் காங்கேசன்துறை பொலிஸாரினால் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவ் விசாரணையின்போது சாட்சிகள், தாம் எந்தவிதமான தவறுகளும் செய்யவில்லை என்றும், தமது படகு இயந்திரக்கோளாறு காரணமாக பழுதுபட்ட நிலையில் இன்னொரு படகில் வந்தவர்களிடம் எமது நிலைபற்றிக் கூறிவிட்டு படகிலிருந்த போது நாம் கைது செய்யப்பட்டோம்.

கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறையில் நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது இலங்கைக்கான இந்தியப் பிரதித் தூதுவர் திரிபாதி எங்களை வந்து சந்தித்து எமது விடுதலைக்கு உதவுவதாகக் கூறியிருந்தார் என்று தெரிவித்திருந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட நீதிபதி விக்னராசா இந்தியத் தூதரிடம் தொடர்புகொண்டு விடுதலைக்கு ஏற்பாடு செய்வதாகவும் இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவித்து அறிவித்தல் வரும் வரை இவர்களை 19.06.2000 திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டனர். இது விடயம் தொடர்பாக சட்டமா அதிபருக்கு 'பக்ஸ்' மூலம் தகவல் அனுப்பப்பட்டது.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் பெயர் விபரம் வருமாறு: இரண்டுபிள்ளைகளின் தந்தையான இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இசைக்கி முத்து இருதயராசா (வயது57), தூத்துக்குடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாரான யேசுதாசன், அழங்சேசன் இரண்டுபிள்ளைகளின் தந்தையான சூசைதாசன் ஆகியோரே கடந்த 10நாட்களாக தடுத்துவைக்கப்பட்டவர்களாவர்.

(வ-3)

★ வடக்குக் கிழக்கு மாகாணத்தில்

# ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சை மாவட்டரீதியாக நடைபெறும் திகதி

(கல்முனை)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் கல்விப்பொதுத்தராதரப் பத்திர உயர்தரப்புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை வடக்குக் கிழக்கு மாகாணம் முழுவதிலும் நடைபெறவுள்ளது.

17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் 24 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை மட்டக்களப்பு மாவட்டத்திலும்24ஆம்திகதி முதல்26ஆம்திகதிவரை வவுனியா, கல்முனை, மன்னார், ஆகிய இடங்களிலும் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை திருமலை மாவட்டத்திலும் மேற்படி பரீட்சைகள் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந் நேர்முகப் பரீட்சைக்கு மாவட்ட ரீதியாக அழைக்கப்பட்டோர் எண்ணிக்கை விபரம் வருமாறு; யாழ்ப்பாணம் 183, முல்லைத்தீவு 183, கிளிநொச்சி 150, மன்னார் 129, திருமலை 142, மட்டக்களப்பு 306, கல்முனை 135, வவுனியா 22 பேர் ஆகும்.

(வ-ச)

# மது போதையில் மனங்குழம்பி தற்கொலை செய்து கொண்டார்?

(யாழ்ப்பாணம்)

கொட்டடி சிவன் பண்ணையை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நாதன் (வயது 44) என்பவர் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் தற்கொலை செய்து கொண்டார்.

மது போதையில் காணப்பட்ட இவர் அன்று முழுவதும் மனம் குழம்பிய நிலையில் காணப்பட்டதாகவும் பின்னர் மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதனை தொடர்ந்து கழுத்தில் கயிறு மாட்டி தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரியவருகிறது.

இவரது சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

★வவுனியாசனசமுகாமில்தங்கியுள்ள

# திருமலை மட்டக்களப்பு மக்கள் செயலகம் முன் சத்தியாக்கிரகம்

(வவுனியா)

வவுனியா சனச தற்காலிக முகாமில் தங்கவைத்துள்ள திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் 21 குடும்பங்கள் சேர்ந்த 80 பேர் நேற்று காலை வவுனியா மாவட்டச் செயலகத்தின் அரச அதிபர் அலுவலக வாசலில் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தினர்.

வன்னியிலிருந்து வந்த தம்மை தமது சொந்த இடங்களுக்கு அனுப்புமாறு கோரியே 4 மணித்தியாலங்கள் இச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினார்கள்.

இரண்டு மாத காலத்திற்கு மேலாக தாம் இந் நலன்புரி நிலையத்தில் பலசிரமங்கள் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் அம்மை நோய் சொறி சிரங்கு போன்றன ஏற்படுவதாகவும் குளிப்பதற்கு மேலதிக நீரைப்பெற முடியவில்லை எனவும் தம்மை சொந்த இடங்களுக்கு அனுப்பும் படியும் புகார் செய்தனர்.

வவுனியா மேலதிக்க அரச அதிபர் ரகுநாதபிள்ளை கருத்துத் தெரிவிக்கையில் பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதி கிடைத்தால் இவர்களை சொந்த இடங்களிற்கு அனுப்புவதில் ஆட்சேபனை இல்லை என்று கூறினார்.

(வ. ச. 103)

## ரெனிஸ் வீராங்கனை

உலகில் 2வது வரிசை ரென்னிஸ் வீராங்கனையான அமெரிக்காவின் லின்சேவிபன் பூட் மார்டிஸ்ரெனிஸ் சாம்பியன் ஒற்றெயர் பட்டத்தை வென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### பல கொலைக்---

ஆர். ஜோகராஜன், திருமலை மாவட்ட எம்.பி இரா. சம்பந்தன், எம். ஏ. சுபைர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொலைகள் புரிந்ததாகக் கருதப்படும் புளொட் உறுப்பினர் 602 கொலைகளை புரிந்துள்ளதாகவும், இது தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு நியமிக்க வேண்டுமென மட்டக்களப்பு வாழ் மக்கள் என்ற தலைப்பில் முறைப்பாடு என்னும் துண்டுப்பிரசுரமும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதேவேளைபடையினரால் கைது செய்யப்பட்டு விசாரணையில் விடாமல் காலதாமதம் செய்வது குறித்தும் தொல்லை தவிர்ப்புக்குழு ஆராய்ந்தது.

(வ)

### ஈ.பி.ஆர்.எல்.எப்---

மாதம்31ம் திகதிவரைவழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை சுரேஷ் பிரேமச்சந்திரனின் அறிவிப்பை நீதிமன்றம் ஏற்கனவே தடை செய்திருந்தமை தெரிந்ததே.

(ந)

### மலச்---

றது.

மலச்சிக்கலுக்காக மருந்து சாப்பிடுவது கெட்டபழக்கமாகும்.

பழகிக் கொண்டால் எப்போதும் மலம் கழிக்கவேண்டுமாயின் மருந்து உட்கொண்டால் தான் மலம் வெளியாகும். என்ற பழக்கத்திற்கு ஆகிவிடும்.

எனவே மலச்சிக்கல் உள்ளவர்கள் இரவு வேளை தொடர்ந்து 1 மேசைக் கரண்டி விளக்கெண்ணெயுடன் $\frac{1}{4}$டம்ளர் பாலை கலக்கி குடிக்கவும். பின் மூன்று இரவுகள் ஒன்றுவிட்ட ஒருநாளைக்கு இதே போல் குடிக்கவேண்டும்.

இப்படி செய்வதனால் மலம் போவது ஒரு ஒழுங்கிற்கு வந்து விடும்.

அதிகாலை வெறும் வயிற்றில் நிறை தண்ணீர் குடிப்பது ஒரு வழியாகும்.

கடுக்காய்களை நீரில் ஊற விட்டு இரவு குடித்து வருவது இன்னொரு வழியாகும்.

அல்லது காலை எழுந்தவுடன் வயிற்றை கீழ்நோக்கி பிடித்து விடும் உடற்பயிற்சியை மேற்கொண்டால் மலச்சிக்கலை நீக்கமுடியும்.

### மர்மப்---

யில் அனுமதிக்கப்பட்டுள்ளார் கோப்பாய் இலகடியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் நீராவியடி கடையிற்சுவாமி ஒழுங்கையில் வசிக்கும் வாய் பேச முடியாத வ. தனபாலசிங்கம் (வயது19) என்பவரே படுகாயமடைந்தவராவர்.

இவர் பழைய அலுமினியப் பாத்திரங்களை சேகரித்து விற்பனை செய்பவர் என்றும் அவ்வாறு பழைய பாத்திரங்கள் சேகரிக்கச்சென்றபோதே மேற்படி சம்பவம் இடம் பெற்றதாக தெரியவருகிறது.

(ச-105)

### ஐக்கிய---

பப்பட்டது.

ஊர்வலத்தின் முடிவில் ரணில் விக்கிரம சிங்கா தலைமையில் கூட்டம் நடை பெற்றது.

இக் கூட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தையும் பாரபட்சமான அரச நியமனங்களையும் காரசாரமாகக் கண்டித்து உரையாற்றினர்.

இதே வேளை இவ் ஆர்ப்பாட்டப் பேரணியை ஒட்டி கொழும்பில் டலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### முதற் சுற்றின்---

படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று எடுக்கப்படும் இறுதித் தீர்மானத்தைத் தொடர்ந்து இருதரப்பும் இணைந்து அடுத்த வாரமளவில் தமிழ்க்கட்சிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பேச்சின் பின்னர் இன்று மாலை அல்லது நாளை ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்காவும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரசிங்கவும் இணைந்து ஒரு செய்தியாளர் மகாநாட்டை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

### ஐந்து---

செயலாளர் சுந்தரம் டிவகலாலாவிற்குமேற்படிதொழிற் சங்கங்கள் அனுப்பிவைத்துள்ளன.

தமிழ்ப் புத்தகங்களில் வரும் பிழைகள் திருத்தப்படல் வேண்டும். ஆசிரியர் நியமனம் போன்ற 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துள்ள இச் சங்கங்கள் இக்கோரிக்கைகளை எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன் நிறைவேற்றத் தவறின் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளன.

திருமலை தமிழ் ஆசிரியர் ஒன்றியம், திருமலை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், திருமலை மாவட்ட அதிபர் சங்கம், வடக்குக்கிழக்கு மாகாண பொது ஆசிரியர் ஒன்றியம், பட்டதாரிகள் சங்கம் ஆகியனவே இணைந்து மேற்படி கடிதத்தை அனுப்பி வைத்துள்ளன.

(ச-60)

### குமார் கொலை---

பாளர் பத்துல விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் உண்மையான கொலையாளியை அடையாளம் கண்டுள்ளனர் என்றும், அவற்றை வெளியிட மாட்டோம் என்றும் விரைவில் இப்பிரச்சினை தீர்ந்து விடும் என்றும் தெரிவித்தார்.

சாட்சியங்கள் பயம் காரணமாக் கொலைதொடர்பான சம்பவங்களை கூற மறுத்துள்ளனர் என்றும் தற்பொழுது அவர்கள் சாட்சியம் அளித்து வருவதாகவும். கொலையாளியின் உருவ அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டு தற்போது அவற்றை அடையாளம்கண்டுள்ளோம்மேலும் சில தகவல்களைப் பெற வேண்டியிருப்பதினால் விடயங்களை தற்போது வெளியிட முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கொலை தொடர்பான விசாரணைகளில் தங்களுக்கு திருப்தி இல்லைஎன காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

(வ)

### புதிய தேர்தல்---

முன்னர் போல் தொகுதி வாரித் தேர்தல் முறையையும் மாவட்டரீதியான விகிதாசாரத் தேர்தல் முறையையும் நடைமுறைப்படுத்தும் புதிய தேர்தல் நடைமுறையாக அமையலாம் என்று தெரிய வருகிறது,

தற்போதுள்ள 225பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகை புதிய நடைமுறையின் படி 260 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

இந்நடவடிக்கையின் படி தொகுதிவாரியாக 160பேரும் மாவட்டரீதியாக 80 பேரும் தேசியப்பட்டியல் மூலம் 20 பேரும் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படவுள்ளார்கள்.

தொகுதி வாரியாக நடைபெறும் வாக்களிப்பில் யார் கூடுதலான வாக்குகளைப் பெற்று முன்னணியில் இருக்கிறாரோ அவர் தொகுதியின் எம். பியாக தெரிவுசெய்யப்படுவார்.

மாவட்ட விகிதாசாரத் தேர்தல்முறை தற்போதுள்ள நடைமுறைப்படியே நடைபெறும்.

இந்த தேர்தல் முறைச்சீர்திருத்தம் சம்மந்தமாக தேர்தல் திருத்தசட்டமூலம் மே மாதத்திற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சட்ட திருத்த மூலத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சிஆதரவு வழங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(வ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.